

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 6	இதழ்: 08	ஜனவரி - 2025	விலை - ரூ.15/
VOL:6	ISSUE: 08	January - 2025	Rs. 15/-





ஆவோ சாயி மகல்சாபதி

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-6 மலர்-08 ஜனவரி-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம், சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே....

என் குழந்தையே உன்னை என் இருகரத்தாலும் தாங்குகிறேன். கர்மாக்கள் சிறிதும் மீதம் இராமல் நசிந்துவிடும் அளவுக்கு என் பெயரை உச்சரித்துக் கொண்டே இருப்பதால் ஒரு லோபியை போல பொக்கிஷமாக இரவு பகலாக உன்னை பாதுகாக்கிறேன்.

யாரிடம் நீ மனம் விட்டு உன் குறைகளை பகிர்ந்து கொள்கிறாயோ அங்கிருந்து நிவர்த்திக்கான வழிகளை நேர் செய்கிறேன். யாரை தேடி நீ போகிறாயோ அவராகவே நானிருந்து உன்னை வரவேற்று உபசரிப்பேன்.

சோதனை காலத்தில் உன்னோடு யாரேனும் பயணித்தால் அது நானே. வீட்டில் இருக்கும் சந்தோஷம் தான் மிக பெரியது. அந்த சந்தோஷத்தின் அடிப்படையில் தான் உனது கஷ்டம் நீங்குவதன் வேகமும் இருக்கிறது.

மனதுக்குள் ஒளிந்திருக்கும் எல்லா கஷ்டங்களையும் அவற்றை அனுசரித்து நீ நடப்பதையும், பிறரது கிண்டலுக்கும் கேலிக்கும் ஆளாகி அவமானபட்டு நிற்பதையும், அநியாயமாக உன் உடைமைகளை பிறர் அபகரித்துக் கொண்டு உன்னை நடுத்தெருவில் நிற்க வைத்ததையும், இன்னும் பலர் அப்படி முயற்சிப்பதையும் நான் அறியாமலா இருக்கிறேன்?,

இனி பொறுக்க மாட்டேன். அந்த துஷ்டர்களை பிரம்பால் அடித்து துரத்துவேன், தப்பு செய்தவர்களுக்கு தண்டனையை தந்து, உனக்கு நீதி கிட்டும்படி செய்வேன். உனது வாழ்க்கையில் நீ நினைத்தபடி வெற்றி பெற வைத்து உன்னை பாதுகாக்க எப்பவும் உன்கூடவே இருப்பேன்.

-பகவான் சீரடி சாய்பாபா.

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் எழுபத்தி எட்டாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா, 08.12.24 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில்" (9/1A, பழனியப்பா 2 ஆவது தெரு, அயனாவரம், சென்னை–23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.



காலை 8.00 மணிக்கு சத்சங்கம், தியானத்துடன் துவங்கிய விழாவில், புத்தக வெளியீடு காலை பத்து மணிக்குத் தொடங்கியது. இம்மாத இதழை இறைச்சேவகர் துரைப்பாக்கம் திரு. நாராயணன் அவர்கள் வெளியிட, பாடி சாயி பக்தர் திரு. ஜெய்கணேஷ் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தனர்.

விழாவிற்கு "பாராயணப் பகலவன்" திரு.சுந்தர்சாய் அவர்கள் தலைமையேற்க, திரு.பாலாஜி, திருமதி. மாதங்கி பாலாஜி, திரு. நாராயணனன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திருமதி. ஜெயலட்சுமி, திருமதி. சரண்யா, திரு. பிரபு, திருமதி. தனம், திரு. அகஸ்டின், திருமதி.இந்துமதி,





ஆகியோர் தங்களது கருத்துக்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் தனது கருத்தில், நமது குரு அவர்கள் நமக்கு போதிக்கும் ஞான மார்க்கத்தை நமது இதழிலும் செயல்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்றார். மேலும், பகவான் சாயிநாதரே என்னை நம்புவோறுக்கு ஆறு வித சாஸ்திர, சம்பிரதாயங்களும் தேவையில்லை என்று கூறியிருப்பதை சுட்டிக் காட்டிப் பேசினார். ஏனைய பக்தர்களும் அதையே சுட்டிக் காட்டியதால், இந்த இதழில் இருந்தே "ஆத்மஞானத்திற்கு" முக்கியத்துவம் கொடுத்து ஞான மார்க்கத்திற்கான வழியில் செல்வோம் என்று உறுதி கூறுகின்றோம்.

எனவே நமது சத்சங்கத்திலும், இதழிலும் நான் யார் என்று அறிவதற்கு "ஆத்மஞானமும்" அதற்குப் பயிற்சியாக "தியானம்" பற்றிய செய்திகளும் அதிகளவில் இடம் பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், புத்தகம்



நடத்துவதற்குண்டான அடிப்படை செலவுகள் மிக அதிகளவில் உயர்ந்துவிட்டபடியால் நமது சாயி மகராஜ் குருவை தேடி வாசகர்கள், தங்களால் இயன்ற சந்தாதாரர்களை இணைத்து சாயி சேவையில் பங்குகொள்ளும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

சென்றமாதம் நமது "பிரார்த்தனை செம்மல்" திரு. கலியன் சாய் அவர்கள் நமது இதழுக்கு, மூன்று வருட சந்தாவிற்கு இரண்டு நபர்களையும், ஒரு வருட சந்தாவிற்கு இரண்டு நபர்களையும் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளார். அவரும் அவர்தம் குடும்பத்தினரும் பகவான் சாயி நாதரின் அருளால் அனைத்து நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று பிரார்த்திப்போம்.




பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலகமாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மனநிம்மதியுடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

– அன்புடன் ஆசிரியர்.

வலி



வாழ்வில் நிகழும் அதிர்ச்சிகரமான சம்பவங்களே மனப் பக்குவம் தருகிறது! அதுவே ஞானத்தை நோக்கி ஆன்மாவை நகர்த்துகிறது! ஒரே மாதிரியாக வாழ்க்கை நகர்ந்து கொண்டே இருந்தால் அதில் ஒரு சுவாரஸ்யமே இல்லை! இராவணனே இல்லாத இராமாயணம் போல் திருப்பு முனை அற்று வாழ்க்கையே சலிக்கும்! அகந்தையோடிருக்கும் மனதிற்கு அடிகள் தேவை! அடிகள் படாமல் யார் ஒருவரும் பகவான் பாபாவின் திருவடிகளை நோக்கி செல்ல இயலாது!

அதிர்ச்சியே ஞானம் எனும் பாடலின் பல்லவி! பிறகு தான் பக்குவம் சரணத்திற்கு வருகிறது! மனம் எளிதில் நிற்காது! ஓடிக் கொண்டே இருக்கும் இயல்புடையது! ஓடும் நதிக்கு தடுப்பணை போல் அதிர்ச்சிகர சம்பவங்கள்! உண்மையில் அது வரம்! அதுவே தீய கர்மாவை கழிப்பதற்கான மாபெரும் வாய்ப்பு! அதுவே விழிப்புணர்வை தருகிறது! இந்த அதிர்ச்சிகரமான சம்பவம் பகவான் ஸ்ரீ புத்தருக்கே நிகழ்ந்திருக்கிறது! நமக்கு நிகழ்வதில் ஒன்றும் தவறே இல்லை! வாழ்வில் வலியே ஆசீர்வாதம்! வலியை நினைத்து வருந்திக் கொண்டே வாழ்வதல்ல ஞானம்! வலியிலிருந்து வெளியே வருவதற்கு கற்றுக்கொள்வதே ஞானம்.

வலியே வெளிச்சம்! எனக்கு வலிக்கிறது சுவாமி!" என்று நாம் பாபாவிடம் பதறி வேண்டுவதை விட... அது சிறந்த ஆசீர்வாதம் என்று நாம் உணர ஆரம்பிக்கையில், வாழ்வில் எது நிகழ்ந்தாலும் சலனமற்ற தன்மை ஏற்பட ஆரம்பிக்கிறது! சலனமே சாபம்! திடமே தெய்வீகம்! சாயி பக்தர்கள் நாம் திடமானவர்கள்! உலகம் முழுக்க வலம் வரப் போகிற சாயி தேருக்கு நாம் வடமானவர்கள்! ●



சாய் தியானாலயாவில் “சாயி லீலா”

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம். கடந்த ஜனவரி 2022 இல் இருந்து 2025 ஜனவரி வரை மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து “சாய் தியானாலயாவில் சாயிலீலா” கட்டுரையை படித்து வந்த வாசகர்களுக்கும், எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய எனது குருவும் ஆசிரியருமான யோகி ஸ்ரீராம் பாபாவிற்கும் எனது பணிவான வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாயி சத்சரிதம் இரண்டாவது அத்தியாயத்தில் பகவான் சா

யிநாதர் ஹேமாத்பந்திடம் இங்கு நிகழும் அனைத்து குறிப்புகளையும் எழுதி வைத்துக்கொள். என்று கூறியதைப்போன்றே எனது குருஜி அவர்களும் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பாக "சாய் தியானாலயா" ஆரம்பித்த போது இங்கு நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் குறித்துவைத்துக் கொள் என்று கூறினார்.

நான் ஹேமாத்பந்த் இல்லை அல்லவா? ஆதலால் எதற்கு இந்த வேலை என்று அவரிடமே கேட்டேன். அதற்கு குருஜி அவர்கள் பின்னால் உதவும். நாளை என்ன நடக்கும் என்று நமக்கு என்ன தெரியும். நாளையே நாம் ஒரு புத்தகம் ஆரம்பிக்கலாம். அதில் பாபாவின் பக்தர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை நாம் எழுத வேண்டி வந்தால் என்ன செய்வது குறிப்புகள் இருந்தால் நாம் தயங்காமல் எழுதலாம் அல்லவா அதற்குத்தான் என்று கூறினார்.

நானும் சரி என்றவாறு கடந்த பன்னிரெண்டு வருடங்களாக சாய் தியானாலயாவில் நடந்த நிகழ்வுகளை சிறு சிறு குறிப்புகளாய் குறித்து வைக்கத் தொடங்கினேன். வருடங்கள் உருண்டோடத் தொடங்கின. குருஜி அவர்கள் கூறியதைப்போன்றே பாபாவின் புகழைப் பாடுவதற்கென்றே " சாயி மகராஜ் குருவைத் தேடி என்ற புத்தகத்தை ஆரம்பித்தார்.

அவர் புத்தகம் ஆரம்பித்ததில் இருந்தே "சாய் தியானாலயாவில் சாயிலீலா" என்ற தலைப்பில் எழுது என்று என்னிடம்




- ஜெயந்தி ஸ்ரீராம்

கூறிக்கொண்டே இருப்பார். நானும் பல காரணங்களைக் கூறி தட்டிக்கழித்துக் கொண்டே வந்தேன். காரணம் நாம் எப்படி எழுதுவது என்ற தயக்கம்தான்.

புத்தகம் ஆரம்பித்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. இனியும் தாமதிக்காதே எழுத தொடங்கு எவ்வளவுதான் நானே எழுதுவது என்று ஒரு நாள் குருஜி அவர்கள் சற்று கோபமாக கேட்க, நானோ சற்று தயங்கியபடி, எப்படி எழுதுவது என்று தெரியவில்லை என்று கூறினேன்.

நான் எழுதுகின்றேன் என்ற நினைவில்லாமல் எழுது தானாக வரும். மற்றதை நான் சரி செய்து கொள்கின்றேன் என்றார்கள். மேலும் இனியும் நீ எழுத தாமதித்தால் நீ பன்னிரெண்டு வருடங்களாக சேர்த்து வைத்து குறிப்புகளுக்கு என்ன மரியாதை என்று நினைத்துப்பார் என்றும் கேட்டார்கள்.



நான் மேலும் தயங்கியபடியே, எவ்வளவோ நபர்கள் பாபாவின் லீலையைப் பற்றி எழுதியிருக்கின்றார்கள். இதில் நான் என்ன எழுதிவிடப் போகின்றேன் என்ற கூறினேன். அதற்கு குருஜி அவர்கள் இங்கு எழுத்தாளர்கள் முக்கியமில்லை. பாபாவின் அனுபவங்கள்தான் முக்கியம்.

நீ குறித்துவைத்திருக்கும் குறிப்புகளில் பாபாவின் அனுபவக்கடலில் ஆழம் காணமுடியாத பக்தி, ஞானம் என்னும் முத்துக்கள் ஏராளமாக குவிந்து கிடக்கலாம். அவைகளை எல்லாம் மீண்டும் படித்துப்பார்த்து மாலையாக கோர்த்தால் இனி வரும் பக்தர்கள் அதை படித்து உள்வாங்கி பாபாவின் மீதான தங்களது பக்தியின் உயரத்தை அதிகப்படுத்திக் கொள்ளலாம் அல்லவா? அது அவர்களை ஞானத்தின் பாதைக்கு அழைத்துச்

செல்லும் அதனால் இது மிகவும் தேவையான ஒன்று என்று கூறினார்.

இது நடந்தது 2022 நானும் ஒருவாறாக எனது தயக்கங்களை எல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட்டு, ஆசீர்வதிக்க பகவான் சாயிநாதரும், வழிநடத்த குருஜியும் இருக்கும் போது நாம் எதற்கு தயங்க வேண்டும். நாமும் எழுதுவோமே என்ற துணிச்சலுடன் எழுத ஆரம்பித்தேன்.

நான் எழுத ஆரம்பித்தும்தான் ஓர் உண்மை எனக்குப் புலப்பட்டது. நான் எழுதுவது அடுத்தவருக்கு அல்ல! அது எனக்குத்தான் என்று. எழுத, எழுத, மேலும், மேலும் நான் என்னை உணர்ந்து கொண்டேன், பகவான் சாயிநாதரை உணர்ந்து கொண்டேன், எனது குரு யோகி ஸ்ரீராம் பாபாவையும் நன்கு உணர்ந்து கொண்டேன்.

பிரபஞ்ச இயக்கத்தில் இன்பமும், துன்பமும் கலந்து காணப்படுவதே இயற்கை. இன்பம் வரும் போது கொண்டாடும் உள்ளம், துன்பம் வரும்போது தவியாய் தவித்து தள்ளாடும் அத்தகைய நிலையில் வழிகாட்டியின் உதவி மகத்தான சேவை புரிகின்றது. என்பதனை நான் எழுதிய பக்தர்களின் அனுபவங்கள் எனக்கு சுட்டிக்காட்டியது.

பத்து மாதம் கருவில் சுமந்து பெற்றவள் தாயாயினும், நம் சாயிநாதர் என்ற அன்னையின் கருணைக்கும் அன்பிற்கும் எல்லையே இல்லை. தந்தையின் வழிகாட்டுதல் சில நேரங்களில் பிள்ளைக்கு தவறாகவே தோன்றும். ஆனால் அவன் தந்தையாகும்போது அவனுக்கு அது நன்கு புரியும் அல்லவா? அதுபோன்றே நமது தந்தை சாயிநாதரும் சில நேரங்களில் கடுமையாக நடந்து கொள்வதாக தோன்றினாலும் இறுதியில் அது பெரும் நன்மையாகவே இருக்கும் என்பதனையும் நன்கு உணர்ந்தேன்.

எத்தனைதான் மனிதமனம் தானே அனைத்தையும் சாதிப்பது போன்று தோன்றினாலும் அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதே உண்மை. குரு என்னும் வழிகாட்டி அனைத்துமாய் உடன் இருந்தாலன்றி நம்மால் என்ன சாதிக்க முடியும். அவ்வரிய குருவும், எங்களுக்கு எல்லாமுமாக இருக்கும் பகவான் சாயிநாதருக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியினை தெரிவித்துக்கொண்டு அவர்களது ஆசியை வேண்டுகின்றேன்.

மேலும் இத்தொடரில் வந்த சாயி பக்தர்களின் அனுபவங்களை எழுதவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டபோது அனைவரும் ஒப்புக்கொண்டு நான் எழுதுவதற்கு ஊக்கம் கொடுத்ததற்கும் எனது மனமார்ந்த நன்றியினைக்கூறி இத்தொடரை நிறைவு செய்கின்றேன். நன்றி! வணக்கம்! மீண்டும் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

ஓம் சாய்ராம்.

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் அயனாவரம் அய்யப்பன் குருசாமி T.V. குட்டி கிருஷ்ணன் மேனன் அவர்களின் ஜீவ பீடத்தை தரிசனம் செய்து அவரின் வரலாற்று குறிப்புகளை அறிந்து கொள்வோம் வாருங்கள்.



– அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

T.V. குட்டி கிருஷ்ணன் குருசாமி

1922 ஆம் ஆண்டு கேரள தேசத்தில் எடப்பாடூர் கிராமத்தில் மாலு அம்மையார்க்கும், அச்சுத மேனன் தம்பதியருக்கு மகனாய் பிறந்தார். 8 வயதில் இருந்து அவர் பல தேசங்களில் தேசாடனம் செய்து வந்ததால் திரு. T.V. குட்டி கிருஷ்ணன் அவர்களைப் பற்றி அவ்வளவாக விவரம் கிடைக்க வில்லை, எனினும் அவரின் சீடர் திரு. அப்புகுட்டன் சாமி அவர்கள் தொகுத்து கூறியதை உங்களுக்கு தெரிவிக்கிறேன்.



ஒரு நாள் கொந்தூர் மூகாம்பிகை கோயில் போகும் வழியில் அமைந்துள்ள 'காஞ்சகளு' என்ற இடத்தில் ஸ்ரீ ராமதாச பக்த சமாஜம் என்ற விலாசத்தில் ஒரு குருவிடம் வேத சாஸ்திரம், ஹோமம், ஜோசியம், மந்திர வேதங் களும் கற்றுக் கொண்டு இருந்தார். 1960 ல் சபரிமலை யாத்திரைக்குச் செல்ல மாலை அணிந்து கொண்டு தாய் தந்தையரிடம் ஆசிவாங்க ஊருக்கு வந்தார்.

சபரிமலை தரிசனம் முடிந்த பிறகும் ஊரில் தங்காமல் அவரு டைய தேசாடனப் பயணத்தை துவங்கினார். பல தேசங்கள் சுற்றிய குருசாமி இறுதியாக அயன்புரம் என்ற அயனாவரத்தை வந்தடைகிறார். வசந்த தோட்டம் என்கிற இடத்தில் முன் தெருவில் உள்ள ஒரு வீட்டில் குடியிருந்தார் கிருஷ்ணன் சாமிகள்.

அங்கிருந்து அப்பகுதி ஏழை மக்களுக்கு தேவையான தர்ம காரியங்களையும், அன்னதானம், சித்த வைத்தியம், ஜோசியம்



ஆலய முகவரி : ஸ்ரீ ஐயப்பன் திருக்கோயில், குருசாமி T.V. கிருஷ்ணன் குட்டி சாமி (குட்டி கிருஷ்ணன் குருசாமி) ஜீவபீடம், எண்: 155, பில்கிங்டன் சாலை, அயனாவரம், சென்னை. (அயனாவரம் பஸ் டெப்போ பின்புறம் ஸ்ரீ ஐயப்பன் திருக்கோயில் உள்ளது)

பேருந்து மார்க்கம் : சென்னை கோயம்பேடு திரு.வி.க. நகர், இறங்கும் இடம் அயனாவரம் காசி விஸ்வநாதர் ஆலயம். தடம் எண்: 46, 46A, 46B, 46C, சென்னை பாரிமுனை வில்லிவாக்கம். இறங்குமிடம் சயானி, தடம் எண்: 20, 20A, 20B, 120.

இரயில் மார்க்கம் : சென்னை கடற்கரை திருவள்ளூர் மின்சார வண்டி, இறங்குமிடம்: பெரம்பூர், இங்கிருந்து ஆட்டோ மூலம் ½ கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீ ஐயப்பன் கோவிலை அடையலாம்.

மற்றும் பல உதவிகளை மக்களுக்கு இலவசமாக செய்து ஆன்மீகப் பணியினை செய்து வந்தார்.

காலப்போக்கில், திரு. T.V. ஆனந்தன் M.P. மற்றும் இரயில்வே தொழிற்சங்க தலைவர் அவர்களின் மூலமாக இன்றைய No:155, பில்கிங் டன் சாலை என்ற விலாசத்தில் சென்ட்ரல் போர்டு இரயில்வே இடத்தில் ஆனந்த சித்தன் ஐயப்பனுக்கு 1972 ல் கோயில் கட்ட ஆரம்பித்தார்கள். கோவில் வேலை நடைபெற்றுக் கொண்டு இருந்த போதே 1982 ஆண்டு பிப்ரவரி 2 ஆம் நாள் குருசாமி அவர்கள் சித்தியடைந்தார்.

அதன் பிறகு குருசாமியின் தம்பியாகிய திரு. வேணுகோபால் சாமி மற்றும் அவர்கள் குடும்பத்தினர் இணைந்து கோவில் திருப்பணியை முடித்து கும்பாபிஷேகம் செய்து ஐயப்பனையும் மற்ற பரிவார சுவாமிகளையும் பிரதிஷ்டை செய்து, நித்திய பூஜை மற்றும் அன்னதானம், வார பூஜை, வருடா வருடம் சுதர்சன ஹோமம், ஐயப்பன் விளக்கு பூஜை மற்றும் சபரிமலை யாத்திரை சிறப்பாக செய்து வருகின்றார்கள்.

நன்றி! ●

தொடர் - 42



அதிதேவதை

ஸ்ரீ சாயிநாதர் உண்மையில் பண்டரிநாதனே என்பதில் துளிகூட ஐயமில்லை ஆயிக்கு. பாபாவிற்கு மதிய ஆரத்தி வழிபாட்டை கூட்டு வழிபாடாக மாற்றியதைப் போல, ஸ்ரீசாயிநாதருக்கு (பண்டரியில் விட்டலனுக்கு நடக்கும் சயன ஆரத்தி மற்றும் காலை ஆரத்தியை போலவே) முறைப்படி குறைவில்லாமல் சமர்பணம் செய்ய ஆயத்தம் ஆனாள்.

ஷீரடியில் முதன்முதலாக நடக்கப்போகும் ஆரத்தி வழி பாட்டிற்குரிய சகல பொருட்களை அடியார்கள் மூலம் உரிமையோடு ஆயி கேட்டுப் பெற்றுக் கொண்டாள். ஸ்ரீ சாயி நாதருடைய ஸமஸ்த பொருட்கள், பூஜைப் பொருட்கள், சாவடி ஊர்வலத்திற்கான பொருட்கள் என அனைத்துமே ஆயியின் கண்காணிப்பில் ஏற்பாடு செய்யப் பட்டது.

ஸ்ரீ சாயி நாதரின் மீது கொண்ட பிரேமபித்து காரணமாக அங்கும் இங்கும் ஓடிப்போய் தன் குருசேவையை ஓய்வில்லாதபடி செய்தாள் ஆயி பாபாவிற்கு செய்யும் எந்த ஒரு சங்கல்பத்தை எடுத்துக் கொண்டாலும் அதை முடிக்காமல் இருக்கமாட்டாள்.

ஆயியின் நிழலாக ஆத்மரூபமாக பாபா இருக்கையில் எவரும் ஆயியை நெருங்க அஞ்சுவார்கள். காரணம் ஆயி எதைச் செய்தாலும் அனைவரும் அறியும்படியாக, தன் குருசேவைதனை செய்வாள். இப்படியாக ஒரு நாள் பாபாவின் அடியார்கள் ஆன தீட்சித், நூல்கர், ஜோக், கேல்கர், மஹல்சாபதி எனச் சிலரை அணுகி தன் எண்ணத்தை முறையிட்டாள்.

எதிர்காலத்தில் பல நன் மைகள் விளையும் எனக் கூறி, ஆரத்தி செய்வதன் பலமான முக்கியது வத்தை ஆயி எடுத்து உரைத்தாள். இராதா கிருஷ்ணமாயியின் பக்திபாவத்தை உணர்ந்த

அடியார்கள் ஆயி பாபாவிற்கு செய்ய நினைக்கும் எந்த ஒரு முடிவும் சுயநலமற்றது என்றும், சாயிநாதருடைய உயர்ந்ததான கீர்த்தியை அகிலம் அறியட்டும் என்பதாலும் அனைவரும் சம்மதம் கூறினர்.

ஆனால் இடையில் ஒரு வினா ஒன்று எழுந்தது? அது யாதெனில் ஆயி எடுத்த முடிவு நன்மை ஆனாலும், மதிய ஆரத்தி வழிபாட்டில் ஒரு பாடலைப் பாடி பாபாவிற்கு ஜெய கோஷம் எழுப்புகிறோம்.

இருப்பினும் இரவு ஆரத்தியிலும், காலை ஆரத்தி வழிபாட்டிலும் எதைப் பாடுவது? இந்த முடிவு சரியானதா? சிந்தியுங்கள் என்றனர்.

அடியவர்கள் உண்மையில் குழம்பியே போனார்கள். அவர்களது மனம் தடுமாறும் போது நம் ஆயி எல்லோருக்கும் பிடித்தமான ஓர் செய்தியை கூறினாள். "யாவரும் தடுமாற வேண்டாம். எனக்கு தேவை தங்களது ஒத்துழைப்பு மட்டும் தான். பாபாவின் ஆரத்தி வழிபாட்டில் நிறைய பாடல்கள் இருக்கிறது, அதைக் கூறுகிறேன் கேளுங்கள்!

உண்மையில் சாயிநாதர் பாண்டுரங்கன் என்பதில் ஐயம் கொள்ள வேண்டாம். பண்டரியில் வாழும் பகவான் விட்டலன் இங்கு ஷீரடியிலும் சாயிநாதராக எழுந்தருளி உள்ளான். ஆகையால் பண்டரியில் விட்டலனுக்கு இரவு ஆரத்தியிலும், காலை ஆரத்தியிலும் பாடப்படும் அதே ஆரத்தி பாடலை

சாய் சரவணன்

நாம் சாயிநாருக்கு பாடினால் பாபாவிற்கு மேன்மேலும் உயரிய பெருமையை தந்துவிடும்.

ஷீரடி பண்டரியாக மாறும் என பல விஷயங்களை கூறினாள் ஆயி! சயன ஆரத்தி சாவடியில் எடுக்கும் செயல்பாடுகளும், நேரத்தையும் அதே போல் காலை ஆரத்தியின் செயல்பாடு மற்றும் நேரத்தைக் குறித்தும் பல விளக்கங்களை தந்தாள் ஆயி! ஆயினும் இது போன்று ஆயி கூறுவதைக் கேட்டு தயங்கவும் செய்தனர். இதுபோல நடக்க இயலுமா? என்ற கேள்வி எல்லாம் எழத் தொடங்கியது.

காரணம் பாபாவின் மீது அடியார்கள் கொண்ட குறைவற்ற நம்பிக்கையே! சாயிநாதரை விட்டலனாக பாவிக்கும் பக்தி எளிதில் வந்துவிடுமா என்ன? இறுதி முடிவாக ஆயியின் திடபக்தி, அயராத சேவை, எடுத்துக் கொண்ட சங்கல்ப பலத்தால் பாபாவின் அருளால் அடியார்கள் செய்யலாம் என்று முடிவிற்கு வந்தனர். அதே சமயத்தில் தீட்சித் அவர்களும் ஒரு சங்கல்பத்தை மேற்கொண்டார். யாதெனில் தீட்சித் தான் தங்குவ தற்கும் ஏற்றார்போல ஒரு வாடா கட்டவேண்டும் என்பதே ஆகும். இந்த மாபெரும் இரு சங்கல்பமும் பாபாவிடம் எடுத்துரைக்கப் பட்டது.

பாபாவின் அடியார்களின் அன்பிற்கு கட்டுப்பட்டு சாவடியில் ஆரத்தி எடுப்பதற்கும், தீட்சித் அவர்கள் வாடா கட்டுவதற்கும்

பாபா பரிபூரணமாக சம்மதம் தெரி வித்தார். அடியார்கள் மகிழ்ந்தனர்.

பிறகு ஆயியும், அடியார்களும் ஆரத்தி வழிபாடு செய்வதற்கும், தீட்சித் வாடா கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா தொடங்கு வதற்கும் ஒரு நாளை தேர்ந் தெடுத்தனர்.

10.12.1910 சனிக்கிழமை அன்றைய நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட அந்நாளில் தீட்சித் வாடா" கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா பாபாவின் ஆசியாலும் அடியார்களின் துணை கொண்டும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

இராதாகிருஷ்ணமாயி பாபாவிற்கு சாவடியில் சயன ஆரத்தி எடுப்பதற்கான சகல பொருட்களை தயார் நிலையில் வைத்திருந்தாள். மாலை நேரம் வந்தது. பாபா மசூதியிலிருந்து சாவடிக்கு வரும் முன்பாகவே சயன ஆரத்தி எடுப்பதற்கும், பாபாவிற்கு பட்டாடை, நெய்வேத்யம் என எல்லாவற்றையும் தயார்படுத்தி வைத்திருந்தாள்.

மேலும் பாபாவின் சில அடியார்களுக்கும், சேவை புரியும் அடியார்களுக்கும், பாபாவிற்கு விட்டலனின் ஆரத்தியை பாடுவது பற்றியும், பாபாவின் முன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியெல்லாம் கற்று தந்திருந்தாள் இராதாகிருஷ்ணமாயி. ஷீரடியில் யாவருக்கும் விஷயம் பரவியது. இன்று முதல் பாபாவிற்கு சாவடியில் இரவு ஆரத்தி, காலை ஆரத்தி வழிபாடு தொடங்க இருப்பதை எண்ணி அடியார்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆனால் ஆயியை ஆரம்ப காலம் தொட்டே வெறுத்தவர்கள் மேலும் பல இடையூறுகளை ஏற்படுத்தினாலும், ஆயியின் காது பட திட்டினாலும் அனைவரும் தன் குழந்தைகளே என பாவித்து தன் சேவையைத் தொடர்தாள். நேரம் வந்தது சாவடி ஊர்வலம் வைபவம் சிறப்பாக ஆரம்பம் ஆனது. ஆயியால் கொடுக்கப்பட்ட சேவைகளை சேவகர்கள் அழகுறச் செய்தனர். மசூதியிலிருந்து பாபா சாவடிக்கு கிளம்பினார்.


சாவடியில் அலங்கார வர்ணனைகள் மிகவும் ஆச்சரியம் தரும் வகையில் காணப்பட்டது. சாவடி முழுக்க வண்ண அலங் கார விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. நித்ய கிரமபடி அடிய வர்களின் இன்னிசை மழையில் ஹரிநாம கோஷமும், நடுவே சா யிநாத் மகராஜ் மெல்ல நடந்து வந்து சாவடியை அடைந்தார்.

பாபாவிற்கு குடையும், வெண்சாமரமும் வீசப்பட்டு மரியாதையாக சாவடியின் உள்ளே பாபா பிரவேசித்தார். சாவடியின் உள்ளே பாபா திண்டின் மேல் அமர்ந்தார். உடனே பாபாவிற்கு வெள்ளிப் பாத்திரத்தில் அவரது திருவடிகளுக்கு பாதபூஜை நடை பெறுகிறது. அர்க்யமும், பூஜைகளும் நடைபெற்றது. அடியார்கள் உள்ளேயும், வெளியேயும் ஆனந்தமுடன் பாபாவையே உற்று நோக்கி இருந்தனர்.

பாபாவிற்கு வெண்சாமரம்

வீசப்பட்டு ஆயியாலும், அடியார் களாலும் சமர்பிக்கப்பட்ட அலங்கார பட்டாடைகள், மாலை அணிமணிகள் அணிவிக்கப்பட்டு பாபாவிற்கு சந்தனம் பூசி தாம்பூலமும் அளிக்கப்பட்டது. இறுதியில் பாபாவிற்கு சில்லிம் (புகைப்பிடிக்கும் மண்குழாய்) தயார் செய்து அடியார்கள் அதை முதலில் சோதித்து பின் பாபாவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பின் யாவரும் சில்லிமை ஏற்றுக் கொண்டனர். மகராஜ் அமர்ந்



திருக்கும் இடம் முழுக்க வாசனை மிகுந்த ஊதுபத்தி ஏற்றப்பட்டு இருந்தது. பாபா அடியார்கள் தனக்கு செய்யும் இத்தகைய சேவையில் மனமகிழ்ந்து இருந்தார். பாபாவின் முகமானது காந்த ஒளி வீசுவதைப் போல் காணப்பட்டது.

பின் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்த பாபாவிற்கு சாவடியில் அடியார்கள் கூட்டு வழிபாடாக முதன் முதலாக பாபாவை விட்டலாகவே நினைத்து சகல மரியாதை யுடனும் விட்டலனின் ஆரத்தியை இன்னிசை முழக்கங் களுடன் பிரேமை யோடு எடுக்கப் பட்டது. விட்டலனின் ஆரத்தி பாடுகையில் பாபாவும் கைகளைத் தட்டினார். மேலும், அடியார்கள் "ஆரத்தி ஞானராஜா ஆரத்தி துகாராமா" என்ற ஆரத்தி பாடலை பாடுகையில் பாபா தன்னுடைய இருப்பிடத்திலிருந்து எழுந்து தன் தலையைத்தாழ்த்தி இருகரம் கூப்பி நமஸ்கரித்தார்.

காரணம் சாதுக்களின் மேல் கொண்ட பாபாவின் வாஸசல்ய பாவம். இப்படியாக இரவு ஆரத்தி வழிபாடு பண்டரி விட்டலனின் ஆரத்தியை பாடி முடிக்கும் தருவாயில் "ஞான தேவருக்கும் துகாராமிற்கும்" ஜெயகோஷம் செய்யப்பட்டது. கட்டியம் கூறுபவர்கள், பாபாவின் முன் மரியாதையாக நின்று "கட்டியம் கூறினர்".

சாயி நாதருக்கு முதன் முதலாக இரவு ஆரத்தி முடிந்து பாபாவிற்கு நெய்வேத்யம் செய்யப்பட்டு பின் அடியார்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. அடியார்கள் பூர்ணமாக மனமகிழ்ச்சி அடைந்து பாபாவின் திருவடியில் வீழ்ந்து பணிந்து நமஸ்கரித்தனர். பாபா உத்தரவு பிறப்பித்தார். "எல்லோரும் நலமாக வீட்டிற்கு சென்று ஓய்வெடுத்து காலையில் வாருங்கள் என்றார்". அடியார்களும் அவரவர் வீடுகளுக்குப் புறப்பட்டார்கள்

தொடரும்

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம் - 10

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா



கடந்த பத்து மாதமாக நான் சாயியை மிக அருகில் இருந்து பார்த்து வருகின்றேன். நான் சாயியை முதன் முதலில் சந்தித்தபோது என் மனதில் எனது குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்கு ஏதாவது ஒரு உத்தியோகத்திற்கு ஏற்பாடு செய்ய மாட்டாரா என்ற பிரார்த்தனையோடுதான் சந்தித்தேன். ஆனால் கடந்த பத்து மாதங்களுக்குள் என் சிந்தனை வெகுவாக மாறி இருப்பதை உணர்கின்றேன்.

எது உண்மையோ அதையே தற்போது எனது மனம் நாடத் தொடங்கியிருக்கின்றது என்னிடம் இருந்த லௌகீகத் தேடல் ஆன்மீகத் தேடுதலாக மாறிவிட்ட அதிசயம் நிகழ்ந்திருக்கின்றது. இத்தனைக்கும் நான் ஏதும் ஆன்மீக பயிற்சி எடுத்துக்கொள்ள வில்லை. தினந்தோறும் சாயியின் பார்வை என் மீது படுகின்றது


அவ்வளவுதான்.

சாயி கூறியதைப்போல் எப்போதும் பேப்பரும், பேனாவுமாக சுற்றுகின்றேன். இப்போதெல்லாம் என் மனம் ஞான மார்க்கமாக சிந்திப்பதை என்னாலேயே நம்ப முடியவில்லை. நானா இப்படி சிந்திக்கின்றேன் என்று வியக்கின் றேன். உண்மைதான், நான் சிந்திப் பதாக நான் நினைப்ப தெல்லாம் என் சற்குரு ஸ்ரீசாயிநாதரின் சிந் தனைகளே என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

இவ்வியக்கத்தக்க பிரபஞ்சம் முழுவதும் இயற்கை பல கோடிக் கணக்கான உயிரினங்களை படைத் திருக்கின்றது. எந்த உயிரினங்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்து மற்ற உயிர்களுக்கு தீங்கிழைக்காமல் புண்ணியங்களை மேம்படுத்திக் கொள்கின்றதோ அவர்கள் தங்களின் புண்ணிய செயல்களின் பலன்களை அனுப விக்கும் பொருட்டு ஒரு குறிப்பிட்ட காலம் மோட்சத்திற்கு சென்று வாழ்கின்றனர்.

இயற்கைக்கு எதிராக வாழ்ந்து பாவங்களை அதிகரித்துக்கொண்ட சீவராசிகளுடைய ஆத்மாக்கள் நரகத்திற்குச் சென்று தங்களின் தீவினைகளுக்கேற்ற பலன்களை அனுபவித்து துன்பம் அடை கின்றன.

நல்வினை, தீவினை இரண்டும் சம அளவு இருக்கும் ஆத்மாக்கள் மீண்டும் இவ்வுலகினில் பிறக் கின்றனர். அவர்களுக்கு முக்திக்காக உழைப்பதற்கு மீண்டும் ஒரு



வாய்ப்பு தரப்படுகின்றது.

முடிவாக அவர்களது நல்வினை, தீவினை இரண்டுமே முழுமையாக அகற்றப்படும் போது அவர்களும் விடுதலை அடை கின்றார்கள். எனவே அவரவர் களின் செய்கைகள், நுண்ணறிவு, அனுபவத்திற் கேற்றவாறு பிறவிகளைப் பெறுகின்றனர்.

இவ்வுலகினில் வாழும் அனைத்து சீவராசிகளுக்கும் நான்கு விசயங்கள் பொதுவானதாகும். அதாவது உணவு, உறக்கம்,பயம், புணர்ச்சி. பரிணாம வளர்ச்சியில் மனித இனம் மட்டும் ஏனைய பிறப்புகள் அடைய முடியாத ஞானத்தை அடைந்து அதன் மூலம் கடவுளை அடையும் நிலையைப் பெற்றிருக்கின்றன.

கேவலமான அழுக்கு, சளி, கோழை,அசுத்தம் இவைகளால் நிரம்பியதும் தேய்வு, நோய், மரணம்

போன்றவற்றுக்கு காரணமாக அமையும் இம்மனித உடலைத்தவிர கேவலமானது வேறு ஒன்றும் இல்லை என்று சிலர் கூறலாம். இது ஓரளவிற்கு உண்மைதான்.

இவ்வாறான குறை குற்றங்கள் இருந்தாலும், இம்மனித உடலின் மிகச்சிறப்பான மதிப்பு என்ன வென்றால் 'ஞானத்தை' அடைய அது ஒன்றே முழுத்தகுதியுடையதாய் இருக்கின்றது.

மனித உடம்பினால் மட்டுமே, அழியக்கூடிய நிலையில்லா உடம்பின் தன்மையைப் பற்றியும், இவ்வுலகத்தைப் பற்றியும், நித்திய, அந்நித்ய உண்மைகளை பகுத் தறியும் விவேகத்தையும் அதன் மூலம் பிரபஞ்ச ரகசியமான இறைத் தத்துவத்தை அறிந்து கொள்வும் முடிகின்றது.

எனவே உடலை அதன் அசுத்தத் தன்மைக்காக புறக்கணித் தோமானால் இறைக்காட்சியை பெறும் வாய்ப்பை நாம் இழக்கின் றோம். ஆனால் அந்த உடலையே பாராட்டி, சீராட்டி அதை புலன் இன்பங்களில் செலுத்தினால் நரகத்தில் வீழ்கின்றோம்.


எனவே உடலை, முழுவதுமாக புறக்கணிப்பதோ, விரும்பி செல்ல மாக பாராமரிப்பதோ கூடாது. ஆனால் முறையாக பராமரிக்க வேண்டும். குதிரையில் சவாரி செல்லும் ஒருவன் செல்லும் இடம் வரை அந்தக் குதிரையை எவ்வாறு பராமரிக்கின்றானோ அதைப்போல பராமரிக்க வேண்டும். இறுதியாக இவ்வுடல் வாழ்க்கையின் உயர் நோக்கமான "ஆத்மானுபூதி" அடையவே உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

பரம்பொருள் படைத்த பல்வேறு சீவராசிகளில் மனிதன் மட்டுமே "ஞானம்" என்னும் விழிப் புணர்வை பெற்றவன் என்பதை அறிந்த கொள்ள வேண்டும்.

மனித வாழ்க்கை என்பது மரணத்தை நோக்கியது என்பதை அறிந்து கொண்டு அதற்குள் நாம் வந்த குறிக்கோளான "தன்னை உணர்தலை" அடைய நாம் எப்போதும் விழிப்புணர்வாய் இருக்க வேண்டும். சிறிதளவும் காலம் தாழ்த்தக்கூடாது.

நமது சோம்பேறித் தனத்தை அகற்றிவிட்டு தூக்கத்தைக் களைந்து, அல்லும் பகலும் நான் யார் என்ற ஆத்ம தியானத்தை செய்ய வேண்டும். இதை செய்ய தவறும்போது நாம் இன்னும் மிருக நிலையில் இருந்து மனித நிலைக்கு உயரவில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு "இறைத்தன்மையை" அறிந்துகொண்ட ஞானிகள், யோகிகள், முனிவர், சற்குரு, ஆகிய வர்களை அணுகுவதே நமது குறிக்கோளை அடைய மிகச்சிறந்தது மான விரைவான வழியாகும். மத நூல்களை படிப்பதனாலும், மத பிரசங்கங்களை கேட்பதனாலோ, சாஸ்திர சம்பிரதாயங்களை கடை பிடிப்பதனாலோ, பெறமுடியாத "ஆத்மஞானத்தை" சற்குருவே நமக்கு அளிக்க முடியும்.



அவரின் அசைவுகளும், சாதாரணப் பேச்சும் நமக்கு மௌன உபதேசத்தை அளிக்கின்றன. மன்னித்தல், அடக்கம், ஆசையின்மை, தர்மம், மனம், மெய் கட்டுப்பாடு போன்ற நல்ல பண்புகளை சற்குருவின் கூட்டுறவால் நமக்கு கற்பிக்கப்படுகின்றன.

இது அடியவர்களின் மனதில் உள்ள இருளை அகற்றி ஒளியை ஏற்றி அவர்களை ஆத்மாவை அறியச் செய்கின்றது. அத்தகைய பரம்பொருளே ஞானியாக நம்முன் பக்கிரியாக நடிக்கின்றது. இருப்பினும் சாயி எப்போதும் தன் ஆத்மாவிலேயே முற்றிலும் லயித்திருந்தார். சகல சீவராகளுக்குள்ளும் கடவுள் தன்மையைக்கண்டு அவைகளின் மீது அவர் எப்போதும் அன்பு செய்தார்.

இன்பங்களால் அவர் உயர்ந்து போகவும் இல்லை. துன்பங்களால் தாழ்ச்சியுறவும் இல்லை. அவருக்கு அரசனும், ஆண்டியும் ஒன்றே!

பாபா, எந்த சீரடி மக்களின் வீடுகள் முன்னர் ஒரு பிச்சைக் காரனைப் போல் நின்று, "ஓ... அம்மா எனக்கு ஒரு ரொட்டி கொடு" என்று கூவி தம் திருக் கரங்களை ஏந்தி நின்றாரோ அந்த வீட்டுக்கார மனிதர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஒரு கையில் தகரக் குவளையும், ஜோலி என்ற சதுரத்துண்டை ஜோல்னா பைபோல தன் தோளில் தொங்கவிட்டிருந்தார்.

அவர் தினந்தோறும் சில குறிப்பிட்ட வீடுகளுக்குச் சென்றார். அவர் பிச்சை எடுக்கும் விதம் முறையில்லாததாக இருந்தது. சிலநேரம் சில சுற்றுக்கள் சென்றார். சில நேரங்களில் பகல் 12 மணிவரை எடுத்துக்கொண்டிருந்தார்.

சூப், குழம்பு, பால், மோர் போன்ற திரவப் பொருட்களை தன் தகரக்குவளையிலும், சோறு, ரொட்டி போன்ற திடப் பொருட்களை ஜோலி பையிலும் வாங்கிக்கொண்டார்.

பாபா தன் நாக்கில் கட்டுப் பாடுடையவர் என்பதால் அவர் எப்போதும் சுவையறிந்து உண்பதில்லை. எனவே மசூதிக்கு வந்ததும் தன்னால் பிச்சை வாங்கப்பட்ட பல்வேறு உணவுப் பொருட்களை எல்லாம் ஒன்றாக கலந்து ஒரு சட்டியில் கொட்டி அதில் இருந்து மூன்று கைபிடி உணவு மட்டும் எடுத்துக்கொண்டார்.

மசூதியை பெருக்கிய



பெண்மணி பத்து அல்லது பண்ணி ரெண்டு ரொட்டிகளை தன் வீட்டிற்கு எடுத்துச்சென்றாள். அவள் அப்படிச்செய்ததை யாரும் தடுக்கவில்லை. மீதம் இருந்ததை நாய்களும், பூனைகளும் காகங்களும் தாராளமாக சாப்பிட்டன. யாரும் அந்த சீவராசிகளை விரட்டவோ, அடிக்கவோ செய்யவில்லை.

சீரடி மக்கள் அவரை ஆரம் பத்தில் பிச்சைகாரப் பைத்தியம் என்றே கருதினர். பிச்சை எடுத்த சில ரொட்டித்துண்டுகளை தின்று வாழும் அவர் எப்படி மதிக்கப்பட்டு மரியாதை செய்யப் பட்டிருக்க முடியும். ஆனால் அந்த பக்கிரியோ உள்ளத்திலும், கையிலும், மிகவும் தாராளமானவராகவும், ஆசையற் றவராகவும், தர்ம சிந்தனை யுடையவராகவும் இருந்தார்.

அவருடைய வெளித்தோற்றத் தில் இருப்புக் கொள்ளாதவராகவும், ஸ்திர தன்மை இல்லாதவராகவும் காணப்பட்டாலும், அகத்தில் உறுதியுள்ளவராகவும், நிதானம் உள்ளவராகவும் இருந்தார். அவரு டைய வழி மனிதர்களின் அறிவுக்கு எட்டாதது. எனினும் அச்சிறு கிராமத்தில்கூட அன்பும் ஆசீர்வாதமும் உள்ள சிலர் பாபாவை "பரமாத்மா" என்று உணர்ந்து மதித்தனர். அப்படிப் பட்ட ஒருவரான தாத்யா கோதே பாடீல் என்னிடம் கீழ்கண்ட கதையை கூறினார்.

தனது தாயான பாயஜா பாயி சீரடிக்கு வந்த இளம்வயது சா யிபாபாமேல் அதீத பக்தி பூண்டு இவ்வளவு இளம் வயதில் என்ன ஒரு கடுமையா தவம் என்பதை கண்டு இவன் பரமாத்மாவே என்று உறுதிபூண்டு தினம்தோறும் மதியம் ரொட்டியும், காய்கறிகளும் அடங்கிய கூடையை தன் தலையில் சுமந்து கொண்டு கல்லும், முள்ளும் நிறைந்த ஆபத்தான காடுகளுக்குள் நுழைந்து சாயிபாபாவை கண்டு பிடிப்பார்.

பாபாவோ ஆடாமல் அசை யாமல் ஒரு மரத்தின்கீழ் கண்களை

மூடி தவத்தில் இருப்பார். தியானத்தில் அமர்ந்திருக்கும் அவரின் முன்னால் வீழ்ந்து வணங்கி எழுந்து அவரின் முன் சுத்தம் செய்து இலையை விரித்து ரொட்டி காய்கறிகளை வைத்து, அவரை பலவந்தமாக எழுப்பி அதை உண்ணவைப்பார். பாஜாய பாயியின் நம்பிக்கையும், சேவையும் வியக்கத்தக்கதாகும்.

ஒவ்வொரு நாளும், அவர் மதிய வேளையில் காட்டில் அலைந்து திரிந்து உணவை உண்ணும்படி பாபாவை வற்புறுத்தினார். அவருடைய சேவையை நாம் என்ன பெயரிட்டு அழைத்தாலும், இறுதி மூச்சு உள்ளவரை பாபா அதை மறக்கவில்லை. அவர் செய்த சேவையை முழுமையாக ஞாபகத்தில் கொண்ட பாபா அவரது மகனுக்கு அபாரமாக தனது இறுதி காலம் வரை உதவி செய்தார்.

அதுபோலவே தாயும், மகனும் பக்கிரியை கடவுளாகவே நம்பியிருந்தனர். பாபா அவர்களிடம் அடிக்கடி, "ஆண்டித் தனமே" உண்மையான பிரபுத் தன்மையாகும். ஏனெனில் அது எப்போதும் நிலைத்து நிற்கும். செல்வத்தாலான பிரபுத்தன்மை எல்லாம் நிலையற்றவை என்று கூறுவார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னால் பாபா காட்டில் சென்று தவமியற்றுவதை விட்டுவிட்டு கிராமத்திலேயே வசிக்கத் தொடங்கினார். அதில் இருந்து பாயஜா பாய் காடுகளில் சுற்றி அலைய வேண்டிய வேலை இல்லாமல் போனது.

எவரின் உள்ளத்தில் இறைவன் வசிக்கின்றாரோ அந்த ஞானிகள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அத்தகைய ஞானிகளின் கூட்டுறவைப் பெறும் பக்தர்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! தாத்யா கோதே பாடீல், மகல்சாபதி, ஆகிய இரண்டு அதிர்ஷ்டசாலிகள் பாபாவின் கூட்டுறவை சமமாக பங்கிட்டுக் கொண்டனர். பாபாவும் அவர்கள் இருவரையும் சமமாக நேசித்தார்.

இம்மூவரும் தங்களது தலைகளை கிழக்கு, மேற்கு, வடக்கு நோக்கி இருக்கும்படியும், தங்கள் கால்கள் எல்லாம் ஒன்றாக சந்திக்கும்படியும் வைத்து மசூதியில் தூங்கினர். தங்களது படுக்கையை விரித்து அதன்மீது படுத்துக்கொண்டும், பேசிக்கொண்டும், நள்ளிரவு நெடு நேரம் வரை விழித்திருப்பர். அவர்களில் யாருக்காவது தூக்கம் வருவது போல் இருந்தால் மற்றவர்கள் அவரை எழுப்பி விடவேண்டும்.

உதாரணமாக தாத்யா குறட்டை விடத்தொடங்கினால், பாபா உடனே எழுந்து கொண்டு பக்கவாட்டில் அவரை அசைத்து விட்டும், மகல்சாபதி உறங்கினால் அவரை கட்டிபிடித்தும், கால்களால் உதைத்தும் எழுப்பி விடுவார்.


இவ்வாறு பதினான்கு ஆண்டுகள் பாபாவின் மீதுள்ள அன்பினால் தனது வீட்டில் உள்ள பெற்றோரை விட்டுவிட்டு தாத்யா மசூதியில் தூங்கினார். மகிழ்ச்சியான அந்த நாட்களை தாத்யாவால் மறக்க முடியுமா? தாத்யா மீது பாபா காட்டிய அன்பை என்னவென்று

சொல்வது? அவரது அன்பை அளக்க முடியுமா? அவரது ஆசியை எப்படி மதிப்பிடுவது. தனது தந்தை காலமானதும் தாத்யா குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதன் பின்பே தனது வீட்டினில் தூங்க ஆரம்பித்தார்.

சீரடியைச் சேர்ந்த கண்பத் கோதே பாடீலை பாபா மிகவும் நேசித்தார். அதேபோலவே ரஹதா வைச் சேர்ந்த சந்த்ரபன் சேட் என்ற மார்வாடியையும் விரும் பினார். இந்த சேட் காலமான பின்பு, அவரது சகோதரனின் மகனாகிய குசால்சந்தை அதற்கு சமமாக அன்பு செலுத்தி அல்லும் பகலும் அவரது நலத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்தார் பாபா.

சில சமயங்களில், மாட்டு வண்டி களிலும், குதிரை வண்டிகளிலும், நண்பர்கள் புடைசூழ ரஹதா விற்குச் செல்வார் பாபா. அக்கிரா மத்து மக்கள் பேண்ட் வாத்திய இசையுடன் வந்து கிராமத்தின் நுழைவாயிலில் பாபாவை வரவேற்று, அவரின் முன்னால் வீழ்ந்து வணங்கி ஆசி பெறுவார்கள்.

பெரும் வரவேற்பு கோஷங் களுடன், விழா கோலத்துடன் கிரா மத்திற்குள் அழைத்துச் செல்லப் படுவார் பாபா. குசால்சந்த பாபாவை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று மாலை மரியாதையுடன் வசதியான ஆசனத்தில் அமரச் செய்து நல்ல உணவு பதார்த்தங்களை வழங்கி ஆனந்தம் கொள்வார். பின்னர் அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களைப் போல



சகஜமாகவும், மகிழ்ச்சியுடனும் சிறிது நேரம் உரையாடுவார்கள். அதன்பின்னர் பாபா அனை வருக்கும் ஆசியளித்துவிட்டு சீரடிக்குத் திரும்புவார்.

தெற்கே ரஹதாவும், வடக்கே நிம்காவ்வுக்கும் இடையே சரியான மையப் பகுதியில் உள்ளது சீரடி. இந்த இரு இடங்களுக்கு அப்பால் பாபா ஒருபோதும் வெளியில் சென்றதில்லை. அவர் ரயில் வண்டியை பார்த்ததும் இல்லை. பிரயாணம் செய்ததும் இல்லை. ஆனால் ரயில் வரும் நேரத்தையும், புறப்படும் நேரத்தையும் மிகச் சரியாக கூறுவார்.

பக்தர்கள் தரிசனம் முடிந்த தும் பாபாவிடம் விடைபெற்றுக் கொண்டபோது, அவரின் அறிவுரையின்படி நடந்தவர்கள் பெருத்த நன்மையடைந்தனர். அதை மதிக்காதவர்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாயினர்.

சீரடி புனித யாத்திரையின் போது ஒரு சிறப்பான வினோதம் என்னவென்றால் பாபாவின்

அனுமதியின்றி யாரும் சீரடியை விட்டுச் செல்ல முடியாது. அப்படி செல்பவர்கள் சொல்ல முடியாத தொல்லைகளை அனுபவிப்பர். ஆனால் யாரையாவது பாபா ஊருக்கு செல்லலாம் என்று ஆணையிட்டுவிட்டால் அதற்கு மேல் அவர்கள் சீரடியில் தங்கியிருக்க முடியாது.

பக்தர்கள் பாபாவிடம் சென்று வணங்கி ஊருக்குச் செல்ல அனுமதி கேட்கும்போது பாபா அவர்களுக்கு சில யோசனைகளை வழங்குவார். இந்த யோசனைகளை பின்பற்றுபவர்கள் பல நன்மைகளை அடைவர். பின்பற்றாதவர்கள் பல இன்னல்களுக்கு ஆளான சம்பவங்கள் என் கண்முன்னாலே பல நிகழ்ந்தன. அதில் இரண்டு சம்பவங்களை கூறி இவ்வத்தியாயத்தை முடிக்கின்றேன்.

தாத்யா கோதே பாடீல் ஒரு முறை கோபர்காவ் கடை வீதிக்கு குதிரை வண்டியில் செல்ல திட்டமிட்டு பாபாவிடம் வந்து தான் கோபர்காவ் கடைவீதிக்கு செல்லப்போவதாகக் கூறினார். பாபாவோ அவசரப்படாதே! சற்று தாமதமாக செல். தற்போதைக்கு கிராமத்தை விட்டு எங்கேயும் போகவேண்டாம் என்று கூறினார்.

ஆனால் தாத்யா தான் உடனடியாக சென்றே ஆகவேண்டும் என்று அடம்பிடித்தார். அவருடைய வேகத்தைக் கண்ட பாபா, அப்படியானால் மாதவ்ராவை உடன் அழைத்துச்செல்லும்படி கூறினார்.

ஆயினும் அதை கண்டு கொள்ளாமல் குதிரை வண்டியில் ஏறி வேகமாகச்சென்று விட்டார்.

தாத்யாவின் வண்டியில் பூட்டியிருந்த குதிரைகளில் ஒன்று புதிய குதிரை. அது சற்று வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தது. வண்டி புறப்பட்டு சில மைல்களுக்கு அப்பால் சாவல்கேணி என்ற கிராமத்தை தாண்டியதும் அது தாறுமாறாக ஓடத்தொடங்கியது. சிறிது நேரத்தில் வண்டியை கவிழ்த்துவிட்டு வண்டியில் இருந்து கழன்று கொண்டு ஓடியது. வண்டியில் இருந்து கீழே விழுந்த தாத்யா அடிபடாமல் தப்பித்தார். ஆனால் பாபாவின் உத்தரவை தான் மதிக்காமல் வந்ததை நினைத்து வருத்தமடைந்தார்.

ஒருமுறை சீரடிக்கு ஐரோப்பிய மனிதர் ஒருவர் பாபாவை சந்திக்க நானா சாகேப்பின் அனுமதி கடிதத்துடன் வந்திருந்தார். அவர் மசூதியின் வெளியில் இருந்த கூடாரத்தில் வசதியாக தங்கவைக்கப்பட்டார். அவர் பாபாவின் முன் மண்டியிட்டு பாபா கையை முத்தமிட விரும்பினார். எனவே அவர் தொடர்ந்து மூன்று முறை மசூதியின் படிகளில் ஏற முற்பட்டார்.

ஆனால் மூன்று முறையும் பாபா அவரை மேலே வரவேண்டாம் என்று தவிர்த்துவிட்டார். அதை அவர் தனக்கு நேர்ந்த அவமானமாக கருதிய ஐரோப்பியர் சீரடியை விட்டு உடனே புறப்பட விரும்பி தனயு உடைமைகளுடன் பாபாவிடம் விடைபெறுவதற்காக வந்தார்.

பாபா அவரை அவசரப்பட வேண்டாம் அடுத்தநாள் செல்லுங்கள் என்று கூறினார். அருகில் இருந்த பாபாவின் அடியார்களும் பாபாவின் அறிவுரையை கேட்கும்படி எடுத்துக்கூறினார்கள். ஆனால் ஜரோப்பியர் ஒருவரையும் சட்டை செய்யாமல் ஒரு குதிரை வண்டியில் ஏறி சீரடியை விட்டு புறப்பட்டார். முதலில் குதிரைகள் ஒழுங்காக ஓடின. ஆனால் ஸாவுல்விஹீர் என்ற கிராமத்தை தாண்டியதும் எதிரில் வந்த சைக்கிளைக் கண்டு குதிரைகள் மிரண்டு வேகமாக ஓடி ஒரு பாறையின் மீது மோதி கவிழ்ந்தது.

வண்டியில் இருந்த ஜரோப்பியர் கீழே விழுந்து சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டார். அதன்பின்பு அவர் வண்டியில் இருந்து பொது மக்களால் காப்பாற்றப்பட்டாலும், அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக கோபர்காவ் மருத்துவமனையில் சில நாட்கள் சிகிச்சையில் இருக்க நேரிட்டது.

இதைப்போன்ற கணக்கில டங்கா அனுபவங்களை அடிய வர்கள் என்னிடம் நிறையவே கூறி யிருக்கின்றனர். இதிலிருந்து பாபா வின் ஆணைகளுக்கு கீழ்படியா தவர்கள் ஏதோ ஒரு விதத்தில் துன்ப மடைந்தனர் என்றும் அவரது ஆணைக்களுக்கு கீழ் படிந்தவர் கள் பத்திரமாகவும், மகிழ்ச்சி யாகவும் இருந்தனர் என்பதையும் காணமுடிந்தது.

(தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

SoundzGood

Music at its best...



TRUE TO OUR NAME EVERYTIME SOUNDS GOOD!!!

SPREADING HAPPINESS

- Live Instrumental
- Vocal and Instrumental
- Carnatic and all genres





BOOK NOW

9566167680 / 9003120624

WWW.SOUNDZGOOD.IN

46, Rajiv Gandhi salai OMR

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்



- யோகி ஸ்ரீராம் பாபா

பகவான் சாயிநாதரின் பேரருளால் ஆத்மஞான பீடம் அமைப்பதற்குண்டான அனைத்து வேலைகளும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போன்று, இடம் பார்ப்பதற்கு முன்பாக சபை அமைப்பதற்குண்டான பொருளாதாரத்தை சேகரிக்க வேண்டியிருக்கின்றது.

ஆகையால், நமது சாயி அன்பர்களும், எமது சிஷ்ய கோடிகளும், சேவா தொண்டர்களும் பிரதிபலன் பாராது நமக்கென அமையவிருக்கும் "சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்திற்கு" உங்களால் முடிந்த அளவிற்கு காணிக்கைகளை சேகரித்து வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கின்றோம்.

பீடத்தின் சார்பாக காணிக்கை சேகரிப்பதற்கென 25 நன்கொடை ரசீது அடங்கிய சிறிய புத்தகம் அச்சடிக்கப்பட்டுள்ளது. ஆத்ம ஞான பீடம் அமைப்பதில் ஆர்வம் உள்ள அடியவர்கள் நன்கொடை ரசீதைப் பெற்று காணிக்கை வசூலித்துக் கொடுக்கலாம். விருப்பம் உள்ளவர்கள் எம்மை தொடர்பு கொண்டால் நன்கொடை ரசீது புத்தகத்தை அனுப்பி வைக்கின்றோம்.

அமையவிருக்கும் சாய் தியானாலயா ஆத்ம ஞான சபை "அண்டினோருக்கு அன்னவளமும், வேண்டினோருக்கு ஞானவளமும்" என்ற கொள்கைப் பிடிப்போடு பக்தர்களிடம் இருந்து எவ்வித எதிர்பார்ப்புமின்றி செயல்படும் என்பதை உறுதியோடு அறிவிக்கின்றோம்.

அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மனித இனத்தின் தற்போதைய தேவையான அமைதி, நிம்மதி, ஆனந்தம், ஆரோக்கியம் போன்றவற்றிற்கு "ஆத்மஞானம்" என்ற பயிற்சியின் மூலம் " தன்னையறிதல்" என்ற மாபெரும் மருத்துவத்தின் மூலம் எதிர்கால சந்ததியினரை ஆனந்தமாக வாழவைக்கும் பொருட்டு நமது சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் மனித இனத்திடம் இருந்து எதையும் எதிர்பார்க்காமல் செயல்படும் என்பதனையும் கூறிக் கொள்கின்றோம்.

ஏற்கனவே பீடம் அமைப்பதற்காக நமது சேவகர்கள் சேமித்த காணிக்கை தொகை ரூ.1.06000.00. சென்ற மாதம் காணிக்கை அளித்தவர்கள், திரு.சீனிவாசன் கொல்லூறு, சென்னை. ரூ.20,000.00, திரு. சாய் மகராஜ், சென்னை.ரூ.5100.00, ஆக மொத்தம்.ரூ.1,31,100.00. என்பதையும் தெரிவிக்கின்றோம். நன்றி!


STAR
Personal & Caring
Health Insurance
The Health Insurance Specialist
LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA
5 வருடங்கள்
மட்டும்
முதலீடு செய்து
வாழ்நாள் முழுவதும்
உறுதியளிக்கப்பட்ட (Guaranteed)
வருமானம் பெறுங்கள்.
Jeevan Utsav
மேலும் விபரங்களும், முதலீடு செய்யவும் அழைக்கவும்.
G. Gnanamoorthi PH: 8072765423

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
அற்புத ஆன்மீகப் பயிற்சி

ஆத்ம ஞானம்

(உன்னையே நீ அறிவாய்)

மானுட வாழ்வின் ஒட்டுமொத்த பிரச்சனைக்கும் ஒரே தீர்வு தன்னையறிதல்
வாய்ப்பேச்சில் ஒன்றுமில்லை, இணைந்திடுவீர் இக்கணமே!




- தீராத உடல் நோய், மன நோயில் இருந்து விடுதலை.
- ஆரோக்கியம், ஆனந்தம்,
- தொழில் வெற்றி,
- குடும்ப நிம்மதி,
- தெய்வீக அதிர்வுகள்.

விபரங்களுக்கு,

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்,

9/1A, பழனியப்பா 2 வது தெரு, அயனாவரம், சென்னை–23.

9941816692 , 8825831068



யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய
அற்புதமான
ஆன்மீகத் அனுபவத்
தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் விற்பனையில்
உள்ளது. தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்.

விலை 400/-
(தபால் செலவு உட்பட)

G- PAY NO: 9941816692

SAI DHYANALAYA


ஆவோ சாயி
மகல்சாபதி

சீரடி சாய்பாபாவிடம் எத்தனையோ பக்தர்கள் நெருங்கிப் பழகினார்கள். ஆனால் பாபாவிடம் பிரதிபலன் எதையுமே எதிர் பார்க்காத ஒரே பக்தர் மகல்சாபதி மட்டுமே! சாய்பாபா,மகல்சாபதி இருவரது வாழ்க்கையும் இரண்டற கலந்தது. பின்னிப் பிணைந்தது.

இன்று உலகம் முழுவதும் கோடிக்கணக் கான பக்தர்கள் சீரடி சாய்பாபாவின் சிறப்பை உணர்ந்து அவரை பூஜித்து வழிபடுகிறார்கள் என்றால் அதற்கு அடித்தளம் அமைத்து கொடுத்தவர் மகல்சாபதியே! சீரடிக்கு வந்த இளம் பாபா பெயரை "சாய்பாபா" என்று மாற்றிய பெருமையும் மகல்சாபதிக்கே உண்டு. சாய்பாபா என்ற மந்திர சொல் கேட்டு பக்தர்கள் மயங்கிக் கிடப்பதற்கு வித்திட்டது இவர்தான்.

சீரடியில் சாய்பாபாவை 40 ஆண்டுகள் பூஜித்து, ஆராதித்து, வழிபட்ட சிறப்பும் இவருக்கு உண்டு. சாய்பாபாவுக்கு அவர் பக்தனாக மட்டுமல்ல, வேலைக்காரனா கவும் திகழ்ந்தார். இத்தனைக்கும் மகல்சாபதி பரம ஏழை. ஆனால் நல்ல மனிதர். மனசாட்சிக்கு விரோ தமாக எதையும் செய்ய மாட்டார்.

சீரடியில் உள்ள கண்டோபா கோவில், அவரது குல தெய்வ கோவிலாகும். மூலவர் சிவனின்



பெயர் மகல்சாபதி. அந்த பெயரையே அவருக்கு சூட்டி யிருந்தனர். அந்த ஆலயத்தின் பூசாரியாக அவர் இருந்தார். பொற்கொல்லர் இனத்தைச் சேர்ந்த மகல்சாபதிக்கு குடும்பத் தொழில் கை கொடுக்கவில்லை. 7 ஏக்கர் நிலம் இருந்தும் விளைச்சல் இல்லாததால் அதிலிருந்து அவருக்கு வருமானம் இல்லை.

வறுமையில் வாடிய அவர் கண்டோபா ஆலய வருவாயை மட்டுமே நம்பி இருந்தார். அந்த வருவாயும் ஆலய நிர்வாக செலவுகளுக்கு சென்றதால், மகல்சாபதியின் வாழ்க்கை வறுமையில் தள்ளாடியது. மனைவி,



3 மகள்கள், 1 மகனை காப்பாற்ற அவர் கடும் போராட்டங்களை சந்தித்தார். அக்காலகட்டத்தில் தான் 1854 ஆம் ஆண்டில் அவர் பாபாவைச் சந்தித்தார்.

வேப்ப மரத்தடியில் அமர்ந்த இளம் பாபாவின் செயல்பாடுகள் மகல்சாபதியை கவர்ந்தன. ஆனால் திடீரென பாபா மாயமாகி விட்டார். 1858ம் ஆண்டு பாபா மீண்டும் சீரடிக்கு திரும்பிய போது முதன் முதலில் மகல்சாபதிதான் பார்த்தார். மகிழ்ச்சி பொங்க அவர், "ஆவோ சாய்" என்று அழைத்தார். அன்று அவர் அப்படி அழைத்த பெயரே பாபாவுடன் இணைந்து 'சாய்பாபா' என மாறி நின்று நிலைத்து விட்டது.

மகல்சாபதி ஒருநாள் கண்டோபா கோவிலில் பூஜை வைத்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு சாய்பாபா வந்தார். இந்த இடம் மிகவும் அமைதியாக உள்ளது. இங்கு நான் தங்கிக் கொள்ளலாமா? என்று கேட்டார். அதைக் கேட்டதும் மகல்சாபதி கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டார். நீங்கள் ஒரு இஸ்லாமியர். இந்த கோவிலில் உங்கள் காலடி படக்கூடாது. எனவே உள்ளே வராதீர்கள் என்றார்.

அதன் பிறகே சாய்பாபா ஊரின் நடுவில் உள்ள வேப்ப மரத் தடியில் போய் அமர்ந்தார். நாள டைவில் துவாரகமாயி மசூதியில் குடியேறி அடுத்தடுத்து அற்புதங்கள் செய்யப்பட்ட பிறகே சாய்பாபா சாதாரண மனிதர் அல்ல. அவர் ஒரு அவதாரம் என்பதை மகல்சாபதி உணர்ந்தார். அதற்கு பிறகு மகல்சாபதியால் இருப்புக் கொள்ள இயலவில்லை. துவாரகமாயிக்கு வந்து சாய்பாபாவை வணங்கினார்.

நாளடைவில் சாய்பாபாவின் சீடர்களில் உற்ற சீடராக மகல்சாபதி மாறினார். கண்டோபா

ஆலயத்தில் கடவுளுக்கு எத்தகைய ஆரத்தி, பூஜைகள் செய்தாரோ, அதையெல்லாம் அவர் சாய்பாபாவுக்கு செய்தார். சாய்பாபாவுடன் முதன் முதலில் ஆத்மார்த்தமாக ஒன்றியது இவர் தான். ஒரே துண்டில் பாபாவும், மகல்சாபதியும் படுத்துத்துறங்கும் அளவுக்கு அவர்களிடையே நட்பு ஏற்பட்டது.

மகல்சாபதியின் தூய பக்திமிகு சேவையைத் தொடர்ந்து தான் சீரடியில் ஒருவர் பின் ஒருவராக பாபாவின் பக்தர்களாக மாறினார்கள். பாபாவை தங்கள் ஊருக்கு வந்த கண்கண்ட தெய்வமாகப் போற்றினார்கள்.

இதையடுத்து துவாரகமாயி மசூதியில் சாய்பாபாவுக்கு தினசரி ஆராதனைகளை மகல்சாபதி தொடங்கினார். பாபாவின் பாதங்களிலும், கழுத்திலும் அவர் சந்தனம் பூசி, மாலை அணிவித்து, நைவேத்தியம் படைத்து, தீபாராதனை காட்டி வழிபட்டார். இதற்கு இஸ்லாமியர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். என்றாலும் மகல்சாபதியின் மன உறுதி காரணமாக பாபாவுக்கு தினசரி ஆராதனைகளும், வழிபாடுகளும் தொடர்ந்தன.

ஒரு கட்டத்தில் மகல்சாபதி குடும்பத்தில் கடும் வறுமை ஏற்பட்டது. சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் சூழ்நிலை. அவரது ஒரே மகனும் திடீரென எதிர்பாராதவிதமாக மரணம் அடைந்தான். என்றாலும் மகல்சாபதி தினமும் கண்டோபா ஆலயத்துக்கு சென்று பூஜை வைக்க தவறியதே இல்லை.

அங்கு பூஜை முடிந்ததும் நேராக துவாரகமாயிக்கு வந்து பாபாவுக்கு ஆராதனை செய்வார். இரவு ஆராதனை செய்து முடித்ததும் அங்கேயே தூங்கி விடுவார். பாபாவின் நண்பன் போல பழகிய ஒரே நபர் மகல்சாபதிதான். அந்த உரிமையில் சில சமயம் பாபாவிடம் அவர் அடி கூட வாங்கி இருக்கிறார்.

1896ம் ஆண்டு ஒருநாள் மகல்சாபதியை அழைத்த பாபா, இனி இரவு இங்கு தங்காதீர்கள். உங்கள் வீட்டுக்கு செல்லுங்கள். உங்களுக்கு ஒரு மகன் பிறப்பான். அவனுக்கு 25 ஆண்டுகள் நீங்கள் காவலனாக இருப்பீர்கள் என்றார். சாய்பாபா சொன்னது போலவே மகல்சாபதிக்கு 1897ம் ஆண்டு ஜன்மாஷ்டமி தினத்தன்று ஆண் குழந்தை பிறந்தது. இதை பாபா நடத்திய மகிமை என்றே எல்லோரும் கூறினார்கள். இதனால் பாபாவிடம் மீண்டும் மகல்சாபதி வந்து விட்டார். இருவரும் முன்பு போல ஒரே துணியில் படுத்து தூங்கினார்கள்.

இப்படி தன் வாழ்வில் இரண்டற கலந்து விட்ட பாபாவுக்காக, அவர் இறந்த போது மகல்சாபதி 13 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். அதன் பிறகு பாபாவின் மகிமையை உலக மக்கள் தெரிந்து கொள்ள சேவையாற்றினார். அவரது மரணம் கூட பாபா நிச்சயித்தபடித்தான் இருந்தது.



25 ஆண்டுகள் உன் மகனை காப்பாய் என்று பாபா கூறி இருந்தார். அதன்படி மகல்சாபதியின் மகனுக்கு 25 வயது ஆனபோது அதாவது 1922 ல் மகல்சாபதி மரணம் அடைந்தார். சாய்பாபா ஒரு ஏகாதசி தினத்தன்றுதான் தன் உயிரை தன் உடம்பை விட்டு நீக்கி இருந்தார். அதுபோல பாபாவின் நிழலாக வாழ்ந்த மகல்சாபதியும் ஒரு ஏகாதசி தினத்தன்றுதான் தன் உயிரை விட்டார்.

அவர்களது நட்பு எந்த அளவுக்கு ஆத்மார்த்தமானதாக இருந்தது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவை இல்லை. சாய்பாபாவுடன், மகல்சாபதி வாழ்ந்த ஒவ்வொரு நாளும், புனிதமான நாட்களாகும். பாபா தினமும் இரவு விழித்திருந்து நாமஸ்மரணை செய்வதற்கு மிகவும் உதவியாக இருந்தது மகல்சாபதி தான்.

ஒருநாள் மகல்சாபதி வீட்டுக்கு புறப்பட்டபோது பாபா அவரிடம், "பார்த்து போ, வழியில் இரண்டு திருடர்கள் இருக்கிறார்கள்" என்றார். மகல்சாபதி குழப்பத்துடனே சென்றார். வீட்டை நெருங்கியபோது வழியில் 2 பெரிய நல்ல பாம்புகள் இருப்பதைப் பார்த்த பிறகே அவருக்கு பாபாவின் எச்சரிக்கை புரிந்தது.

1886ம் ஆண்டில் ஒரு நாள் மகல்சாபதியை அழைத்த பாபா, "நான் 3 நாட்கள் இந்த உடலை விட்டு விண்ணுக்கு செல்லப் போகிறேன். நான் திரும்பி வரும் வரை என் உடலை நீதான் பத்திரமாக பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றார். அதன்படி பாபா தன் உடலை விட்டு அகன்றார். பாபா இறந்து விட்டதாக கருதிய அதிகாரிகள் அவர் உடலை கைப்பற்றி அடக்கம் செய்ய முயன்றனர். அதைத் தடுத்து நிறுத்தியதன் மூலம் சாய்பாபா புகழ் தரணியெல்லாம் தழைக்க மகல்சாபதி வழி வகுத்தார்.

மகல்சாபதி நினைத்திருந்தால், பாபாவுடன் உள்ள நெருக்கத்தை பயன்படுத்தி கோடி, கோடியாக சம்பாதித்து இருக்கலாம். ஆனால் அவரிடம் எந்த ஆசையும் இருந்ததே இல்லை. பாபா காசு கொடுத்தால் கூட அவர் பெற்றுக் கொள்ள வில்லை.

ஒரு தடவை பக்தர் ஒருவர் தட்டு நிறைய நாணயங்களை வைத்து பாபாவிடம் கொடுத்தார். பாபா அதை ஆசீர்வதித்து திருப்பி கொடுத்தார். உடனே அந்த நபர் அந்த நாணயங்கள் அனைத்தையும் மகல்சாபதியிடம் கொடுத்தார். ஆனால் மகல்சாபதி அதை வாங்கவில்லை. கடைசி வரை அவர் அத்தகைய சொக்கத்

தங்கமாகவே திகழ்ந்தார்.

1918ம் ஆண்டு அக்டோபர் மாதம் சாய்பாபா மரணம் அடைந்த போது அவரை அடக்கம் செய்வது தொடர்பாக இந்துகளுக்கும், முஸ்லிம்களுக்கும் சர்ச்சை ஏற்பட்டது. அதை மகல்சாபதியால் தான் சமரசமாக பேசி நிவர்த்தி செய்ய முடிந்தது. அதனால் தான் உலகம் இன்றும் அவரை, சாய்பாபா விடம் தம்மை முழு நம்பிக்கையுடன் அர்ப்பணித்து ஒப்படைத்துக் கொண்டு பொறுமையை கடைபிடித்து வாழ்ந்த மகான்" என்று புகழ்கிறது.

பாபாவே கதி என்று வாழ்ந்த அவர், பாபா நாமத்தை உச்சரித்தப்படி உலக வாழ்க்கையை முடித்தது குறிப்பிடத்தக்கது. அவர் வாழ்ந்த வீடு இன்றும் சீரடியில் நினைவு இல்லமாக பேணி, போற்றி பாதுகாக்கப்பட்டு வருகிறது. மகல்சாபதியின் மகன் மார்த்தாண்ட்டின் வாரிசுகள் அந்த வீட்டில் வாழ்ந்து வருகின்றனர். சீரடி செல்லும் பக்தர்களில் பலரும் மகல்சாபதி வீட்டுக்கு சென்று மனப்பூர்வமான அஞ்சலியையும், ஆராதனையையும் செலுத்துகிறார்கள்.

அந்த வீட்டில் சாய்பாபா பயன்படுத்திய சில பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. சீரடி வரும் பக்தர்கள் அவற்றையும் வழிபட்டு செல்கிறார்கள். இதன் மூலம் சாய்பாபாவின் புனித அவதார வரலாற்றில் மகல்சாபதி பெயரும் நிரந்தரமாக பெறிக்கப்பட்டிருக்கின்றது. ●

"நிறை குடம்"

ஏவன் ஒருவனுக்கு 'தான்' என்ற அகந்தை மனதில் எழுகின்றதோ அப்போதே அவன் ஆன்மீக பேராற்றல் கொண்டவன் அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். 'தான்' என்பது அகந்தை அல்ல அறியாமையாகும். தான் என்ற எண்ணம் உள்ளவனை உலகின் "அனைத்து பற்றுக்களிலும் சிக்கிக் கொண்டவன்" என்பதாக புரிந்து கொள்ளலாம்.


அவனது மனதிலும் இதயத்திலும் சூறாவளி போன்ற துன்ப நிலைகள் தொடர்ந்து கொண்டே இருப் பதினால் தான், அவற்றை மூடி மறைத்து, சமூகத்தில் ஒரு அந்தஸ்தத்துடன் இருக்க எண்ணி வெளிப் பார்வைக்கு தான் பேரறிவாளி போல காட்டிக் கொண்டு தான் ஆத்ம விடுதலை பெற்றவன், சுதந்திரமானாவான் என தன்னைத் தானே புகழ்ந்து கொள்கின்றான்



ஆனால் அதே சமயத்தில் உண்மையான அறிவாளியோ எந்த விதமான சலனத்தையும் வெளிப்படுத்தாமல், தன்னை பற்றி யார், என்ன நினைத்தாலும் அவை தனக்கு அல்ல என்ற நிலைப்பாட்டுடன் அமைதியாக இருக்கின்றான். அவனுக்கு தான் யார் என்பது தெரியும், நன்றாக புரியும். நிறை குடம் தளும்பாது என்பது அவனுக்கே பொருந்தும்.

●

தொடர் - 19



திருவருள் தேடி

ஓம் சாய்ராம் நமது சாய் அன்பர்கள் அனைவருக்கும் சுந்தர்சாய் சிரம்தாழ்த்தி வணங்கி இனிய ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். நம் இதய தெய்வம் சாய் பகவான் நம் எல்லோரையும் தம் கருணை மிகு அருட் பார்வையால் அரவணைத்து மனதை ஆழ்ந்த இறையனுபவங்களில் திளைத்திட பிரார்த்திக்கின்றேன்.

சென்ற இதழில் புதிய நாட்டிற்கு உத்தியோக மாற்றம் செய்யப்பட்டு, அங்கு வாடகைக்கு வீடு தேடிச் சென்ற இடத்தில் எதிர்பாராமல் சாய்பகவானைப் பற்றி உரையாடல் நிகழ்ந்து. அந்த வீட்டின் இஸ்லாமிய பெண்மணி நம்மிடம் இருந்த சத்ய சாய் அவர்களின் போட்டோவை விரும்பி வாங்கிக்கொண்டதையும், எனக்கு வேறு ஒரு போட்டோ வேண்டும் என்று நான் விரும்பிய தையும், சட்டென்று என் உள்ளுணர்வு, ஒரு பாபாவை கொடுத்தால் நான்கு பாபா வருவார்கள் என ஒலித்ததையும் எழுதியிருந்தேன்.

நான் தற்காலிகமாக தங்கியிருந்த எனது நண்பருடைய குடியிருப்பில் இருந்து ஒரு ஞாயிறு அன்று சில வேலைகளை கவனிப்பதற்காக கால்நடையாக அலுவலகம் புறப்பட்டோம். எனக்கு பத்தடி முன்பாக என் நண்பர் செல்ல பின்னால் சென்ற என் மீது எதிர்பாராதவிதமாக ஒரு சிறிய மரம் ஒன்று சாய்ந்தது. நல்ல வேளையாக காயம் ஒன்றும் படவில்லை. ஆனால் அந்த மரம் முழுவதும் இருந்த பனி என்மீது கொட்டி என்னை நனைத்து விட்டது.

எனது உடல் நனைந்து குளிரில் ரத்தக் கொதிப்பு அதிகமாக, என் நண்பர் என்னை திரும்ப அறைக்கு அழைத்து வந்து முதலுதவி

செய்து என்னை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி கூறிவிட்டு தான் மட்டும் சென்று வேலையை முடித்துவருவதாக சென்றார். அவர் சென்ற சிறிது நேரத்தில் தொலைபேசி அழைத்தது.

தொலைபேசியின் மறுமுனையில் பேசியவர் எனது நண்பரை கேட்க நான் விபரத்தை கூறினேன். உடனே அவர் என் பெயர் ஸ்ரீனிவாசன் சுரேஷ் உங்களைப்பற்றி கூறியிருக்கின்றார் என்று பேச ஆரம்பித்தார். சுமார் 20 நிமிடங்கள் நாங்கள் அன்யோன்யமாக உரையாட ஆரம்பித்தோம்.

அவரும் என்னை சந்திக்க விருப்பமாய் இருப்பதாகவும், ஆனால் கிருஸ்துமஸ் விடுமுறையை கழிக்க ஊருக்குச் செல்வதாகவும், விடுமுறை முடிந்ததும் ஜனவரி 7 ஆம் தேதி கட்டாயம் நாம் சந்திக்கலாம் என்றும் கூறினார். எனக்கோ மனதில் ஒரு எண்ணம் இவரிடம் ஒரு பாபா படம் வாங்கி வரச் சொல்லலாமா என்றவாறே, எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா? என்று கேட்டேன்.

அவரும் தயங்காமல் சொல்லுங்கள் என்ன உதவி வேண்டும் என்று கேட்டார். உடனே நான் என்னையும் அறியாமல், இல்லை நீங்களே வாங்கி வருவீர்கள். நான் கூற மாட்டேன் என்று கூற, அவரும் சிரித்துவிட்டு புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துத்து விட்டு தொலைபேசியை வைத்துவிட்டார். என்னையறியாமல் நீங்களே வாங்கிவருவீர்கள் என்று என்னை சொல்ல வைத்தது யார்?

ஒருவேளை எனது நண்பர் வீட்டில் இருந்திருந்தால் அந்த நண்பரிடம் நான் பேசியிருக்க வாய்பிருந்திருக்காது அல்லவா? என்னை தனிமைப் படுத்தி நண்பருடன் பேச வைத்தது யார்? என்ன ஒரு நாடகம் இதை என்னால் தற்செயலாக நிகழ்ந்ததாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

என் நண்பரிடம் ஸ்ரீனிவாசன் போன் செய்து ஊருக்கு செல்வதாக கூறினார் என்பதை மட்டும் கூறினேன். பிறகு தினசரி அலுவல்களில் மூழ்கிவிட்டோம். இந்த நாட்டில் புத்தாண்டு கொண்டாட்டம் என்பது டிசம்பர் 21ந்தேதி தொடங்கி ஜனவரி 13 ந்தேதி வரை நடைபெறும். தினசரி, பார்ட்டி, டான்ஸ், என்று விடிய, விடிய தொடரும். நான் இன்னும் அலுவலகத்தை தாண்டி வெளியில் செல்லாததால் இந்த கேளிக்கைகளில் இருந்து விலகி இருந்தேன்.

ஆனால் அந்த புத்தாண்டு உலக மக்கள் அனைவருக்கும் மறக்க முடியாத துக்க சரித்திரமாக மாறிப்போனது. ஆம் சுனாமிப் பேரலை நம் அனைவரையும் அலறச்செய்த 2004 ஆம் வருட புத்தாண்டுதான் அது. சுனாமி களேபரங்கள் முடிந்து ஜனவரி 8 ந்தேதி நான்



சுந்தர் சாய்

புதிய குடியிருப்புக்கு மாறி வசிக்கத் தொடங்கினேன்.

ஒருநாள் நண்பர் ஸ்ரீனிவாசன் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நாம் இன்று மாலை எனது இல்லத்தில் சந்திப்போமா? உங்களுக்குண்டான ஒரு பரிசுடன் என்று கேட்டார். நான் உடனடியாக ஒத்துக்கொண்டு அன்று மாலை அவரை சந்திக்க அவரது இல்லத்திற்குச் சென்றேன்.

அந்த சந்திப்பு எனக்கு ஆசீர்வாதமான புத்தாண்டு பரிசாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. 'உன் மனதில் ஒன்றைப் பற்றி நீ நினைத்ததெல்லாம் வெற்றி' என்ற கவிஞரின் வரியாய், சாய் பகவான் எல்லோர் மனதிலும் இருந்து ஆட்சி புரிகின்றார் என்று நான் உணர்ந்து கொண்ட தருணம் அது.

ஸ்ரீனிவாசன் இல்லத்தை அடைந்த எனக்கு புத்தாண்டிற்கான இனிப்புகளை வழங்கி கூடவே ஒரு சிறிய பார்சலை கொடுத்து என்னை வாழ்த்தினார். நான் பார்சலைப் பிரித்துப் பார்த்தேன். அது ஒரு மாததாந்திர காலண்டர் முழுநீளபடம் நான்கு இருந்தது அது சத்ய சாய் பகவானின் கருணை மிகுந்த உருவப்படங்கள். கைகளை தூக்கி ஆசீர்வதிப்பதுபோல் நான்கும் நான்கு வண்ணத்தில். "கீமிஜிபி லிளிக்ஷிணி ஙிகிஙிகி" என்ற வரிகளுடன். உதிப்பிரசாதத்துடன் என்னை சுனாமியாய் தாக்கினார்.

புத்தாண்டு பரிசை பெற்றுக் கொண்ட எனக்கு சுய நினைவு திரும்ப சற்று நேரமாகியது. நடந்ததை எல்லாம் இன்று திரும்பிப் பார்க்கும் போது நடந்ததை ஓரளவிற்கு என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது. எல்லாம் சாய் பகவான் திருவிளையாடல் என்று.

ஆனால் இதில் நேரடி தொடர்பில்லாமல், இந்த அற்புதம் நிகழும் தருவாயில் அறிமுகமான திரு. ஸ்ரீனிவாசன் அவர்கள் எப்படி இதற்குள் வருகின்றார் என்று வியந்து எனது முந்தைய எண்ண ஓட்டங்களை அவரிடம் பகிர்ந்து கொண்டு இது எப்படி அவரின் கைகளில் கிட்டியது என்று அவரிடம் வினவினேன்.

அதற்கு அவர் மந்த்ராலயம் சென்று மகான் ஸ்ரீ ராகவேந்திரரை தரிசித்து தியானம் செய்துவிட்டு, உங்களுக்கென்று ஏதாவது வாங்கலாம் என்று ராகவேந்திரர் டாலர், மோதிரம் என்று தேடினேன். ஆனால் இவைஎல்லாம் நான் கேட்கவில்லையே என்று ஒன்றையும் வாங்காமல் வந்துவிட்டாராம்.

பின்பு குடும்பத்துடன் சிங்கப்பூர் சென்று விடுமுறையை கழித்துவிட்டு ஊருக்கு வருவதற்காக டில்லியில் இருந்து விமானம் ஏற புறப்பட்டபோது, அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்த ஒருவர் நீங்கள்தான் ஸ்ரீனிவாசனா என்று கேட்டு விட்டு, நான் டெல்லி சத்ய சாய் சமிதியில் இருந்து வருகின்றேன் என்று கூறி அவரிடம் ஒரு பார்சலை கொடுத்திருக்கின்றார்.

சத்ய சாய் சமிதி என்றதும் இவரும் மறுக்காமல் பார்சலை பெற்றுக்கொண்டு ஊருக்கு வந்திருக்கின்றார். இங்கு வந்து

பிரித்துப் பார்த்ததும்தான் அது சத்ய சாயியின் புகைப்படம் என்று தெரிந்திருக்கின்றது. அதுவே எனக்கு பரிசாக அமைந்திருக்கின்றது. சத்ய சாய் பகவானின் இந்த லீலையை எப்படி வர்ணிப்பது.

அன்றிலிருந்து நாங்கள் தினமும் மாலை வேலையில் சந்திப்பதை வழக்கமாக்கிக் கொண்டு சத்சங்கம் போன்று எங்களது ஆன்மீக அனுபவங்களை பகிர்ந்து கொள்ளத் தொடங்கினோம். எனக்கு எளிதாக சமைக்கத் தெரிந்த உப்புமாவை அவரும் பெரிய மனதுடன் விரும்பி உண்பார். பல நாட்கள் அவர் தங்கியிருக்கும் இடத்திற்கு நான் செல்லும் போது அவருக்கு சமைத்துக்கொடுக்கும் ரஷிய சகோதரி மிகவும் நன்றாக சப்பாத்தி வெண்டைக்காய், உருளைக்கிழங்கு என காய்கறிகளுடன் எங்களுக்கு பரிமாறுவார்

திரு. ஸ்ரீனிவாசன் அவர்கள் ஒரு ஷிப்பிங் கம்பெனியில் கன்ஸல்டன்ட் ஆக வேலை செய்து வருகின்றார். மிகவும் புத்திசாலி தியான மார்க்கத்தில் தீட்சை பெற்று முன்னேறிக்கொண்டிருப்பவர் என்பது நான் அறிந்து தெளிந்து அனுபவித்த ஓர் சம்பவம் பின்னாளில் நடந்தது. அது மிகவும் ஆச்சர்யமானது அதை அடுத்த இதழில் தெரிந்து கொள்வோம்.

குரு வாழ்க! குருவே துணை! எல்லாம் சாயி! சாயியே எல்லாமும்!

"முதுமையே வரம்"




வயதானவர்களை போற்றிப் பாதுகாத்தால், வயதான பிறகு நாமும் பாதுகாக்கப்படுவோம்! தர்மத்தை பாதுகாத்தால் தர்மம் நம்மை பாதுகாக்கும் என்பதில் இதுவும் அடங்குகிறது! இளமை நிலை இல்லை என்கிறார் ஆதிசங்கரர்! அதை ஆச்சார்ய சங்கரர் தான் சொல்ல வேண்டும் என்பதில்லை, நமது அன்றாட அனுபவமே சொல்கிறது! இளமை எல்லாம் வெறும் கனவு மயம் என்றார் கவியரசு கண்ணதாசன்!

இதை இளமையோடிருக்கும் வரை மனதால் உணர முடிவதில்லை! இளமை முதுமையை கைவிடுகிறது! ஆகவே இளமை முதுமையான பிறகு இறைவனால் கூட கைவிடப் படுகிறது! எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்கிறோம்! முட்களை விதைக்கிற கைகள் பூக்களின் வாசனையை உணர்வதில்லை! பெரியவர்கள் பகவான் பாபாவுக்கு சமமானவர்கள்! முதுமையின் அனுபவங்களை உள்வாங்குவது என்பது ஞானத்தை நோக்கி நம்மை நகர்த்துகிறது!

வயதின் முதுமை அல்ல முதுமை, மனதின் முதுமையே முழுமையான முதுமை! அந்த முழுமையான முதுமையை இளமை அடைந்து விட்டால் அது கூட இறை அருளுக்குச் சமமானது! வயதில் முதுமை அடைந்தாலும் பெரும்பான்மையானவர்கள் குழந்தைகளே! ஆகவே மீண்டும் குழந்தையானவர்களோடு நேரத்தை செலவு செய்து மகிழ்விப்பது என்பதே ஆசீர்வாதமான தருணங்கள்! இதைப் புரிந்து கொள்வதற்கு முதலில் மனம் முதுமை அடைய வேண்டி இருக்கிறது!

இரமணரின் ஆத்மஞானம்



இரமண மகரிஷி வாழ்வும் வாக்கும் என்ற புத்தகத்தை எழுதிய எம். ஜி. சண்முகம் அவர்களின் நினைவலைகள்:

இருபத்து நான்கு வருஷங்கள் நான் பகவானுடன் அணுக்கமான தொடர்பில் இருந்தேன். அவர் யாருக்கும் விரிவாக உபதேசம் செய்ததே கிடையாது. அவர் சிறு குறிப்புகள் தருவார். தீவிரத் தேடுதலில் இருப்பவர்கள் அதைக் கவனமாக உள்வாங்கிக்கொள்ள வேண்டும். ஆத்ம விசாரம் செய்வ தற்கு எல்லா நாளும் சுபதினமே என்று ஒரு முறை பகவான் அறுதியிட்டுச் சொன்னார்.

பிற சாதனங்களுக்கெல்லாம் ஒரு புறப் பொருளோ அல்லது வசதியான இடமோ தேவைப் படுகிறது. ஆனால் ஆத்ம விசாரத்திற்கு வெளியிலிருந்து நமக்கு எந்தப் பொருளும் தேவை யில்லை. மனதை உள்முகமாகத் திருப்புவது ஒன்றே போதும். ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே ஒருவர் வேறு வேலைகளிலும் ஈடுபட முடியும்.

இந்து மதப் பண்பாட்டோடு என்னை வளர்த்ததினால் நான் சாஸ்திரங்கள் படிப்பதில் ஈடுபட்டேன். ஜபங்கள் பஜனைகள் செய்தேன். தினமும் மூன்று முறை சந்தியாவந்தனம் செய்தேன். இறுதியில் ஜீவன்முக்தி அடைவதுதான் மனிதனாகப் பிறந்தவன் அடையும் பெரும் பதவி என்ற முடிவுக்கு வந்தேன்.

192125 காலக்கட்டத்தில் ஒரு ஜீவன்முக்தரைச் சந்தித்து ஆசீர்வாதங்கள் பெற வேண்டும் என்று மனமுருகப் பிரார்த்தித்தேன்.

என்னுடைய பிரார்த்தனை சீக்கிரம் பலித்தது! என்னுடைய தந்தை திருவண்ணாமலைக்கு மாற்றலானார். ரயிலில் திருவண்ணாமலைக்குச் செல்லும் வழியில் காட்பாடியில் பகவானின் உருவம் என் கண் முன்னே தோன்றியது. இப்படியாக என்னுடைய சத்குரு அவரை நான் நேரடியாகச் சந்திக்கும் முன்னரே வந்து என்னை ஆட்கொண்டார் .

நான் ஆஸ்ரமத்திற்கு வந்தவுடன் பகவான் ஒரு அற்புதமான புன்னகையை வீசி என்னை வரவேற்றார். என்னை முதன் முறையாக அவர் பார்த்ததனால் அவரது இரண்டு உடனடிக் கேள்விகள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. பாசமுள்ள அன்னையைப் போல "நீ எப்போ வந்தே?" என்றும் "உன்னோட வலது கை எப்படியிருக்கு?" என்றும் கேட்டார்.

என்னுடைய 14 வயதில் வலது கை ஒடிந்துபோனது. அது சரியானாலும் கூட கொஞ்சம் வளைந்து குட்டையாக இருந்தது. நான் அதை முழுக்கைச் சட்டை அணிந்து மறைத்துவிடுவேன். எனது நெருங்கிய நண்பர்களுக்குக் கூட அதன் தீவிர உருமாற்றம் தெரியாது. பகவானுக்கு எப்படித் தெரிந்தது? என்னவொரு பாசமிகு கரிசனம் காட்டினார்! பகவான் கேட்டபிறகு எனக்கிருந்த அந்த குறை உணர்வு முற்றிலும் நீங்கியது. என்னை அவர் முன்னால் உட்காரச் சொன்னார்.

அவரைப் பார்த்தபடியே முன்னால் உட்கார்ந்தேன். அவ்வளவுதான் என்ன நடந்தது என்று எனக்கே தெரியாது. எழுந்திருக்கும் போது இரண்டு மணி நேரங்கள் கடந்திருந்தது. இது போன்ற ஒரு அனுபவம் எனக்கு ஏற்பட்டதேயில்லை. என்னுடைய சத்குருவின் பிரசாதமாக இதை நான் என்றும் என் நினைவில் பொக்கிஷமாக வைத்திருப்பேன்.

அன்றுதான் நான் "சத்குரு கேட்காமலேயே தருவார்!" என்ற வாசகத்திற்கான அர்த்தத்தைப் புரிந்துகொண்டேன். அந்தத் தருணத்தில் நான் அவரது அணைப்பிற்குள் சென்றுவிட்டேன் என்று தெரிந்தது. அவரது மகாசமாதி வரையும் அதற்குப் பிறகும் இந்த உறுதியான பந்தத்தை அனுபவிக்கும் பாக்கியத்தை அவர் எனக்கு அளித்தார்.


தினமும் மதியம் இரண்டு மணிக்கு அவரிடம் செல்லும் நான் இரவு எட்டு மணிக்குதான் வீடு திரும்புவேன். ரிபு கீதை, கைவல்ய நவனீதம், யோக வசிஷ்டம் மற்றும் பல அத்வைத நூல்களிலிருந்து அவற்றின் மேன்மையைப் பற்றி என்னிடம் உபதேசிப்பார். அப்போதெல்லாம் வேதங்களில் கரை கண்ட பிரம்ம ஞானியின் உன்னதமான முன்னிலையில் இருப்பதாக நான் உணர்வேன். ●

ஸ்ரீ ரமணர் சர்வ ஞானி. அதற்கு பல நிரூபணங்கள் வைத்திருக்கிறேன். ஒரு நாள் என்னுடைய தந்தை மூன்று அனாக்கள் கைச்செலவுக்குக் கொடுத்தார். அதற்கு பகவானின் ஹாலில் கொளுத்தப்படும் சாம்பிராணி வாங்கிவிட்டேன். ஒரு நாள் எனக்கு அந்த கைச்செலவு காசு கிடைக்கவில்லை. ஆகையால் நான் பகவானிடம் செல்லவில்லை.

அதற்கு அடுத்த நாள் பகவான் கருணை ததும்பும் குரலில், "நேத்திக்கி நீ வரலை. ஏன்னா உன்னால சாம்பிராணி வாங்க முடியலை. மரியாதையான பக்தி வழிபாடு இருதயத்தில் இருந்தால் போதும்" என்றார்.

என்னுடைய தந்தைக்கு திடீரென்று வேலூருக்கு மாற்றலாகிவிட்டது. நாங்கள் யாருமே, குறிப்பாக நான், திருவண்ணாமலையிலிருந்து குடிபெயர்வதற்கு விரும்பவில்லை. ஏனென்றால் பகவானின் தரிசனம் தடைப்பட்டுவிடும். பகவானிடம் நாங்கள் இந்த மனக்குறையைச் சொன்னோம். அவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். சில நாள்கள் கழித்து, வினோதமான நிகழ்வாக, அந்த மாற்றல் உத்தரவு திரும்பப் பெறப்பட்டது.

ஒருவர் மனதில் எழுந்த ஐயங்களுக்கு விசித்திரமான வழியில் பதில் கிடைத்ததைக் கவனித்திருக்கிறேன். உங்களுடைய சந்தேகம் ஹாலில் இன்னொருத்தர்



மூலமாகக் கேள்வியாகக் கேட்கப்பட்டு அதற்கு பகவான் பதிலளிப்பார். உங்கள் சந்தேகம் தீர்ந்தது மட்டுமல்லாமல் பகவான் ஓரக்கண்ணால் உங்களைப் பார்த்து "உன் சந்தேகம் தீர்ந்ததா?" என்பது போல சிரிப்பார்.

பகவான் ஒரு பாறையைப் போல அசையாமல் பல மணி நேரங்கள் அமர்ந்திருப்பார். ஹாலில் மௌனம் குடிகொண்டிருக்கும். அப்போது அங்கே அமர்ந்திருக்கும் ஒவ்வொருவரின் இதயமும் அமைதியிலும் அசையாமலும் இருக்கும். மௌனமே அவரது உண்மையான உபதேசம்!

ஒருமுறை அவர் முன்னால் அமர்ந்திருக்கும் போது கீழ்க்கண்ட எண்ணம் என் மனதைத் தொடர்ந்து ஆக்கிரமித்தது. "சித்தாந்தங்களின் சர்ச்சைக்குரிய விஷயங்களை யாரோடும் விவாதிக்காதே மற்றும் நிறைய சித்தாந்த புத்தகங்களைப் படிக்காதே! அமைதியாக விசாரம் செய். அல்லது தியானம் செய்.

தவறென்று உனக்கே தெரிந்தால் அதைச் செய்யாதே"

பகவான் எனக்குச் சொன்ன சில அறிவுரைகள்:

1) ஒருமுகமாக நீ உன் சுவாசத்தைக் கூர்ந்து கவனித்தால் அது உன்னை கும்பகம் என்னும் நிலைக்கு இட்டுச் செல்லும். அதுவே ஞான பிராணாயாமம் என்பது. 2) நீ மிகவும் அடக்கத்துடன் இருப்பது உனக்கு எப்போதுமே மேன்மை தரும்.

3) இந்த உலகத்தை நீ வெறும் கனவாக நினைக்க வேண்டும். 4) வாழ்க்கையில் கடமையைச் செய்யும் நேரத்தைத் தவிர்த்த மிச்சமிருக்கும் காலமெல்லாம் ஆத்ம விசாரத்தில் ஈடுபட வேண்டும். 5) பிறருக்கு கொஞ்சம் கூட துன்பமோ தொல்லையோ தரக்கூடாது. 6) உன் வேலைகளை நீயே செய்துகொள்.

7) இன்பம் துன்பம் இரண்டையும் விலக்கிவைக்க வேண்டும்.

8) நம் மீதும் நம்முடைய இருதயத்தின் மீதும் கவனத்தைச் செலுத்தி ஒருவர் இடைவிடாது "நான் யார்?" என்ற ஆத்மவிசாரம் செய்ய வேண்டும். அந்தப் பயிற்சியின் போது நம்முடைய மனம் சட்டென்று பூத்துவிடும். ஆகையால் "நான் யார்?" என்ற விசாரத்தை தீவிரமாகச் செய்ய வேண்டும். ●

"கோபம்"



கோபம் என்பது தொற்று நோய் அல்ல அது அறியாமையின் மூர்க்கத்தனமான வெளிப்பாடு! மனம் உறுதியான மலை போல் இல்லாமல் எரிமலை போல் இருப்பதால் ஏற்படும் விளைவே கோபம்!! பாபாவின் மேல் நம்பிக்கையுள்ள பக்தர்களுக்கும், பிற மனிதர்களுக்கும் அப்படி என்ன முதன்மையான வேறுபாடு எனில்.பிற மனிதர்கள் கோபப்படுவார்கள்! சாயி பக்தர்களோ கோபப்பட மாட்டார்கள்!!

ஏனெனில் மனிதர்களிடம் பக்குவப் பிடிமானம் இல்லை! அது தான் சமநிலை ஆனால் பக்தர்களுக்கோ பகவான் பாபாவே பிடிமானமாக திகழ்கிறார்! ஆகவே நாம் கோபப்படுவதில் எந்தவித நியாயமும் இல்லை! அது பாபாவுக்கு பிடிப்பதும் இல்லை! பிறர் நம் மீது கோபப்படும் போது நாம் மௌனமாக "சாயிராம்" என்று சொல்லி நகர்ந்துவிடுவோம்!

கோபம் என்னவோ தொற்று நோய் போல் பதிலுக்கு நாமும் கோபப்படுவது நாம் பாபாவின் பக்தர்களே இல்லை என்பதையே காட்டுகிறது! பிற பக்தர்களே நம் மீது கோபப்பட்டால் "சாயிக்கு கோபப்படுவதே பிடிக்காது!" என்று அவர்களிடம் தைரியமாகச் சொல்வோம்!!

ஏனெனில் சகிப்புத்தன்மை என்பது கோழைத்தனத்தின் வெளிப்பாடு அல்ல. அது விவேகத்தின் வெளிப்பாடு! கோபப்படாமல் இருப்பது கடினமே இல்லை!! கோபம் என்பது ஒரு மனநோய்! நோயாளிகளிடம் நாம் இரக்கப்படுவது போல் நம் மீது கோபப்படுபவர்கள் மீதும் நாம் இரக்கப்படுவோம்!

ஆத்மஞானம் என்றால் என்ன?



ஆன்மீகத்தின் உயர் நோக்க மாக சொல்லப்படும் கருத்து என்னவென்றால் பிறப்பு இறப்பு தளைகளை அறுத்து ஆத்மஞானம் பெற்று வீடுபேறு எய்துவதே என பல ஆன்மீக நூல்கள் கூறுகின்றன. இதில் ஆத்மஞானம் என்பது என்ன என்று பல ஆன்மீக மேதாவி களுக்குத் தெரிவது இல்லை.

வெறுமனே சடங்குகள் செய்வதும், வேள்வி இயற்றுவதும், உருவ வழிபாட்டு முறைகளும் ஆத்மஞானத்தைப் பெற்றுத்தராது, அப்படியானால் இவை வெறும் காலக் கழிவும், பணச் செலவுமே ஏற்படுத்துகின்றன என்று சொல்லலாம். அப்படியானால் ஆத்மஞானம் என்றால் என்ன?

ஆத்மஞானம் என்றால் "தன்னையுணர்தல்" ஆகும். ஆனால் இப்பூமியில் வாழும் ஒவ்வொரு உயிர்க்கும் தன்னைக் காண பழகாமல் பிறரைக் காண்பதுவே பழகிப் போன இயல்பாக உள்ளது. குறிப்பாக "நான் யார்" என்பதைத் தவிர மற்ற அனைத்தையும் நாம் அறிந்து வைத்திருக்கின்றோம்.

நீங்கள் மிகப் பலவற்றை அறிய விரும்புகிறீர்கள் ஆனால் ஒருபோதும் உங்களை அறிய விரும்புவதில்லை. இப்பூமியில் உமது உடலுக்கு மிக நெருக்கமான ஒன்று உண்டென்றால் அது "ஆன்மா" வாகும். ஆயினும் நீங்கள் ஒருபோதும் உமது ஆன்மாவை அறிய விரும்புவதில்லை.

அது தான் இங்கு வருந்தத் தக்கதாக உள்ளது, பகவான்

இரமண மகரிஷி போன்ற உயர்ந்த ஆத்மஞானிகள் "திருவண்ணா மலையில் இருந்து கொண்டே திருவண்ணாமலையைப் பற்றி அறியாதது போன்றது உன்னை நீயே அறியாதது ஆகும். என்று கடிந்து கொள்கின்றார்கள்.

ஆத்மஞானம் என்பது காட்சிப் பொருளற்ற தன்மையைக் கொண்ட ஒரு நிலையை குறிக்கின்றது. அதாவது ஒருவர் தமக்குள்ளேயே தனது ஆன்மாவையே சிந்தித்தபடி, வேறு எந்த புறுஉலக சிந்தனை யின்றி இருப்பதாகும்.

நம்மிடம் அறிவார்ந்த சிந்தனைகள் ஆயிரம் இருந்தும் நமது மனம் கற்பனையான உணர்ச்சிக்குத்தான் அடிமையாகும். ஆன்மாவின் அறிவுசார்ந்த மிக உயர்ந்த தத்துவம் என்னவென்றால் "நான் ஆன்மா" நான் என்று சிந்திப்பதாகும். ஆனால் நம் மனம் "நான் உடல்" என்றே சிந்திக்கும்.

நம்மிடம் மனதிற்குரிய அறிவு சார்ந்த செயல்திறன்கள் பல உள்ளன. ஆயினும் நீங்கள் உமது மனத்துக்குரியதும் அறிவுசார்ந்தது மான செயல்திறன்களை எப்போதும் புற உலக காட்சிப் பொருள் களிடத்தில் உணர்ச்சிவயப்பட்டு இழந்துவிடுகின்றீர்கள்.

ஆனால் உங்களுடைய மனத்துக் குரியதும் அறிவுசார்ந்ததுமான எல்லா சக்திகளையும் ஒருக் கினைத்து உமது ஆன்மாவை நோக்கித் தூண்டி வழிநடத்தி, எந்த புற உலகப் பொருளோடும் தொடர்பு கொள்ளாமல் அமைதியுடன் இருப்பீர்களானால் அந்த நிலையே ஆத்மஞானமாகும்.

இதுவே மெய்யான ஞானமாகும் ஏனென்றால் ஆன்மாவை அறியும் அறிவைத் தவிர பிற அறிவுகள் யாவும் நம்முடைய சொந்த அறி வல்ல! தன்னை அறிதல் மட்டுமே சுய அறிதல் ஆகும் இதுவே ஆத்ம ஞானமாகும். இந்த ஆத்ம ஞானத்தைப் பெற ஒருவர் பல நூல்களைப் படிக்கத் தேவையில்லை. ஒருவர் இந்த ஆத்மஞானத்தை அடைய நேர்மையான உந்துதலை வளர்த்துக் கொண்டாலே போதும்.

அதோடு பரம்பொருளிடத்தில் பக்தியை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். இதுவே தியானம் ஆகும். மேலும் இந்த செயல்முறையில், தன்னையுணர்தலுக்கு பின்னே ஒருவர் வீடுபேறு என்னும் மோட்சத்தை அடைகிறார்.

சகல சாஸ்திரங்களையும், புராணங்களையும் வாசிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தை விட்டுவிட்டு, ஆத்மாவே சத்தியமாகிய பரப்பிரம்ம் என்று அறிந்து ஆத்மதியானம் செய்து கொண்டு இருக்க வேண்டும். ஸ்நானம், சந்தியா வந்தனம், ஜபம், தபம். ஹோமம், நியமம், யாகம், தீர்த்தயாத்திரைகள் முதலாகிய ஸத்கர்மங்களைச் செய்வதனால் தத்வஞானம் உண்டாகாது. அதனால் ஆத்மானுபவத்தை ஒருபோதும் அடையமுடியாது.

"சுட்டசட்டி சட்டுவங் கறிச் சுவை யறியுமோ" சுவையூட்டும் உணவுகளை சமைத்து அதில்


கரண்டியைப் போட்டு வைத்தால் கரண்டியும் சட்டியும் உணவின் ருசியை அறியுமா?

அதைப் போல சகல சாஸ்திரங் களையும் வாசித்து பண்டிதன் என்று பெயர் பெற்ற போதிலும், குருவின் அருளால் வேதாந்த சாஸ்தி ரங்களைக் கேட்டு தத்துவஞான பாடங்கள் அனைத்தையும் மனப் பாடம்செய்துஅடுத்தவருக்குபயிற்று விக்கும் நிலையை அடைந்தாலும் "நான் யார்" என்ற ஆத்மாநுபவம் அடையாவிட்டால் அப்படிப் பட்டவன் முட்டாள் அல்லவா?

"நட்ட கல்லு பேசுமோ நாதனுள்ளிருக்கையிலே" என்றபடி இருதய கமலத்திலிருக்கும் ஆத்ம தேவதையைத் தெரிந்து கொள் ளாமல் வேறோரிடத்தில் தெய்வ மிருக்கிறதென்று தேடுபவர்கள் கையில் இருக்கும் நெய்யை விட்டுவிட்டு வெண்ணையை தேடுபவர்கள் அல்லவா?

அமிர்த்தை குடித்தவனுக்கு சாதாரண நீர் பெரிதாகத் தெரியா தல்லவா? அதைப் போல் வேதாந்த விசாரணையினாலும் குருவினா லும் ஆத்மஞானம் அறிந்தவனுக்கு வேதங்களினால் ஒரு பிரயோஜ னமும் இல்லை என்பது புரியும்.

ஆன்மீக அறிமுகமே இல்லாத வர் ஆரம்ப காலங்களில் ஆன்மீக நூல்களைப் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் அதில் தவறு இல்லை. ஆனால் கடைசி வரை நூல்களை படித்தபடியே இருந்து கொண்டு அதற்கான பயிற்சியை சிறிதும் மேற்கொள்ளலாமல்



அல்லது நூலில்கற்றபடி இலக்கை எய்தாமல் விட்டால் என்ன பயன் உண்டு என்று சொல்லுங்கள்?

பதஞ்சலி மாமுனிவர் "யோக: சித்தவிருத்தி நிரோதந:" என்ற கொள்கையைக் கைக் கொண்டு சிந்திப்பதை நிறுத்தி மனஅடக்கம் செய்யப்பட வேண்டும் என்கிறார். அவ்வாறான செயல் ஆத்ம ஞானத்தை, ஆத்மஅனுபவத்தை தரும் என்கிறார். வெறுமனே நூல்களை மட்டுமே ஓதிக்கொண்டு அறிவுப் பழமாக இருந்தால் மனம் அடங்கவே அடங்காது, சித்தம் அடங்கவே அடங்காது என்பதால் ஒரு கட்டத்தில் நூல் ஓதுவதையும் நிறுத்தி ஆத்ம ஞானம் பெறும் பொருட்டு சிந்திப்பதை நிறுத்தவேண்டும் என்கிறார்.

அவரது கொள்கைப்படி அது சரியானதே. மேலும் அத்துவைதமா? அல்லது துவைதமா? என்ற கருத்திற்கு பகவான் ரமணருடைய கருத்து இங்கு சிந்திக்கத் தக்கதாக அமைவதை நோக்க வேண்டும். அவரிடம் ஒரு அன்பர் இறைவன் அத்துவைதமா? துவைதமா? என்று கேட்டதற்கு முதலில் ஆன்மாவை

அறிந்து கொள்ளுங்கள் பின்னர் அது அத்துவைதமா? துவைதமா? என்று அறிந்து கொள்ளலாம். ஆன்மாவையே அறிந்து கொள்ளாதவருக்கு அத்துவைதம், துவைதம் என்ற கேள்வி எங்கே எழுகின்றது என வினாவுகிறார்.

இதுவே நமது தேடலுக்கான கேள்விக்கும் விடையாக அமையலாம். ஆத்மஞானம் ஒருவரை எல்லாம் அறிந்தவராக ஆக்குகிறது. எல்லாம் அறியும் போது இறைவன் அத்துவைதமா? துவைதமா? என்பது தெரியாமலா போய்விடும். ஆகவே முதலில் ஆன்ம ஞானத்திற்கு முயலுவோம் பின்பு நாம் வேண்டும் விடை நமக்கு தானாகக் கிடைத்து விட்டும்.

தேவையில்லாமல் ஆன்மிகத்தில் குழந்தை நிலையில் உள்ள நாம் ஏன் தத்துவ தருக்கத்தில் ஈடுபட வேண்டும். அறிவு ஒருபோதும் நம்மை ஆன்மீக முன்னேற்றத்தில் கொண்டு போய் விடாது. அதன் பயன் ஒருவரம்போடு முடிந்துவிடுகின்றது. அது நமக்கு விட்டுச் செல்வ தெல்லாம் கேள்விகளை மட்டுமே. இறைவன் அறிவினால் தெரிந்து சொல்லுதற்கு இயலாதவன். ஆகவே முதலில் ஆன்மாவை உணர்வோம்.

அனைத்திலும் நிறைந்திருப்பது ஆத்மாதான் என்ற ஞானம் பிறக்கும் போது என்ன ஆகிறது? எல்லாமே புனிதம் அடைகின்றன. உன்னுள் இருப்பதும், என்னுள் இருப்பதும் ஒன்று தான் என்ற எண்ணம் வந்து விட்டால், நீ என்னை விட உயர்ந்தவனும் இல்லை, என்னை விட தாழ்ந்தவனும் இல்லை.

நீ எனக்கு எதிரியும் இல்லை, நண்பனும் இல்லை. உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை, படித்தவன், படிக்காதவன், கறுப்பன், சிவப்பன், அரசன், ஆண்டி, குரு, சீடன் என்ற அனைத்து வித பேதங்களும் மறைந்து போகும். எல்லாம் சரி நிகர் சமானம் என்ற சமநோக்கு ஏற்படும்.

நீ என்னில் இருந்து வேறு பட்டவன் என்ற எண்ணம் வரும் போது. அன்போ பகையோ வருகிறது. நீ என்னில் இருந்து வேறு பட்டவன் அல்ல என்ற ஞானம் வரும் போது, பகைமை அழிகிறது. எனக்கு நான் பகைவனா? எனக்கு நான் நண்பனா?

நான் நானாக இருக்கிறேன். எனக்கு நான் நண்பனும் இல்லை, பகைவனும் இல்லை. எல்லாம் ஆத்மா தான் என்ற எண்ணம் வரும்போது அனைத்து செயல்களும் நின்று போகும். போற்றுவதும் இல்லை, தூற்றுவதும் இல்லை.

மேடு பள்ளம் இருந்தால், தண்ணீர் மேட்டில் இருந்து பள்ளத்திற்கு ஓடும். தரை சமப் பட்டால் நீர் ஓட்டம் நின்று போகும். ஆத்ம ஞானம் ஏற்படும் போது, கர்ம வினை நின்று போகும். பாவமும் இல்லை. புண்ணியமும் இல்லை.

ஆத்மஞானம் அறிவோம்!
அமைதியுடன் வாழ்வோம்!
வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

ஓமவல்லி என்ற
கற்பூரவல்லி

மழைக்காலம் துவங்கிவிட்ட நிலையில், ஓமவல்லி இலையின் தேவையும் அதிகரித்துள்ளது. அதுவும், நுரையீரலை பலப்படுத்துவதற்கு ஓமவல்லி ரசம் ஒன்றே போதும். அதேபோல, சிறுநீரகங்களுக்கும் இந்த ஓமவல்லி இலை தரும் நன்மை என்ன தெரியுமா?

ஓமவல்லி இலையை, கற்பூரவல்லி இலை என்றும் சொல்வார்கள். இதில் வைட்டமின் C, A, B6 சத்துக்கள் நிறைந்துள்ளன. இரும்புச்சத்து, மெக்னீசியம், பொட்டாசியம், சோடியம், கால்சியம் போன்றவையும் அடங்கி உள்ளன. இதனால், சருமத்துக்கும், கண்களுக்கும் மிகுந்த பாதுகாப்பு கிடைக்கின்றன. நோய் எதிர்ப்பு சக்தியும் கிடைக்கும்.

செரிமான பிரச்சனைக்கும், நுரையீரல் சம்பந்தமான பிரச்சனைக்கும், மிகச்சிறந்த தீர்வாக அமைவது இந்த இலைகள். இந்த இலையிலிருந்து சாறு எடுத்து சர்க்கரையுடன் கலந்து நெற்றியில் பற்றுப்போடலாம். இதனால் ஜலதோஷம், தலைவலி நீங்கும். வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனையும் தீரும். இந்த இலையின் சாறு எடுத்து, சர்க்கரை கலந்து குழந்தைகளுக்கு கொடுத்தால், சளி, இருமல் பிரச்சனை தீரும். மார்பு சளி கட்டுக்குள் வரும்.

அதிகப்படியான கபம் பிரச்சனை இருப்பவர்கள், இந்த இலையை அரைத்து நீர் கலந்து கொதிக்க வைத்து, ஏலக்காய், கிராம்பு, ஒரு ஸ்பூன் தேன் கலந்து 3 நாள் தினமும் 2 வேளை குடித்தால் நிவாரணம் கிடைக்கும். கற்பூரவல்லி இலையை தண்ணீரில் சேர்த்து சுடச்சுட ஆவி பிடித்தாலும் தீர்வு

சிகரெட் பிடிப்பவர்களுக்கு இந்த இலைகள், ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லலாம். காரணம், அதிகப்படியான சிகரெட் பிடிக்கும்போது, நுரையீரல் பாதிக்கப்படும். இதுவே பின்னாளில் புற்றுநோயாக உருவெடுக்கும். அப்படி ஒரு அபாயம் வருவதற்கு முன்பே, இந்த கற்பூரவள்ளி இலையில் சாறு எடுத்து, அதை நன்றாக சுண்டக்காய்ச்சி பாதியளவு எடுத்து வடிகட்டி குடித்து வர வேண்டும். இதனால், புகையினால் உண்டான பாதிப்புகளிலிருந்து விடுபடுவதுடன், நுரையீலின் பாதுகாப்பையும் காக்கலாம்

ஓமவல்லி இலைகளை வைத்து ரசம், வாரம் ஒருமுறையாவது சாப்பிடலாம். வெறும் வாணலில், தனியா, மிளகு, சீரகம் தலா அரை ஸ்பூன் சேர்த்து வறுத்து, பொடியாக்கி கொள்ள வேண்டும். பிறகு, ஓமவல்லி இலை, பச்சை மிளகாய், பூண்டு இவைகளை மிக்ஸியில் கரகரப்பாக



அரைத்து கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் புளியுடன், தக்காளி, உப்பு, ம.தூள் சேர்த்து கரைத்து கொள்ள வேண்டும். ஒரு வாணலில் எண்ணெய் ஊற்றி, கடுகு, கறிவேப்பிலை, காய்ந்த மிளகாய், பெருங்காய தூள், தாளித்து, கரைத்து வைத்திருக்கும் புளிக்கரைசலை கொட்டி கொதிக்க விட வேண்டும். இறக்கும்போது, வறுத்த பொடியையும் சேர்த்து, கொத்தமல்லி தூவி இறக்கிவிடவும்.

இந்த ரசம், நுரையீரலை பலப் படுத்தக் கூடியது. நுரையீரலை போலவே, சிறுநீரகங்களின் ஆரோக்கியத்தையும் இந்த இலைகள் காக்கின்றன என்பது கூடுதல் ஆச்சரியமாகும். சிறுநீர கங்கள் நம்முடைய ரத்தத்தில் உள்ள அதிகப்படியான உப்புகள் மற்றும் இதர பொருட்களை சுத்திகரித்து, அந்த கழிவுகளை சிறுநீர் வழியாக நம்முடைய உடலிலிருந்து வெளியேற்றுகிறது.

அந்தவகையில், இந்த கற்பூரவள்ளி இலைகளும், சிறுநீரை அதிகம் பெருக்கும் தன்மையை கொண்டதுடன், சீறுநீரகங்களில் அதிகளவில் சேரும் உப்புக்களையும் கரைத்து விரட்டும் பண்பை கொண்டது.

சரும பாதுகாப்பையும் தக்கவைப்பதில், இந்த ஓமவல்லி இலைக்கு முக்கிய பங்குள்ளது. நான்கைந்து ஓமவல்லி இலை சாறுடன், கடலை மாவு, கஸ்தூரி மஞ்சள் சேர்த்து முகத்துக்கு பூசி 20 நிமிடம் கழித்து கழுவி வந்தாலே போதும், முகத்தில் உள்ள பருக்களும் மருக்களும் நீங்கிவிடும்.. சருமமும் பொலிவு பெறும்.

நம்முடைய சுற்றுப்புறத்தையும் சுத்தப்படுத்தக்கூடிய இலைகள் என்பதால்தான், இந்த செடியை கட்டாயம் வீடுகளில் வளர்க்க சொல்கிறார்கள். மிகச்சிறந்த கிருமி நாசனியாக பயன் படுவதுடன், விஷப்பூச்சிகளையும் நெருங்க விடாது. சாதாரண மண்ணில், அரை அடி நீளமுள்ள, கனமான தண்டை நட்டு வைத்தாலே, செடி எளிதாக வளர்ந்துவிடும். நேரடி சூரிய வெளிச்சமும், குறை வான தண்ணீர் இருந்தாலே போதும், நம்முடைய உடலையும், நம் சுற்றுப்புறத்தையும் பேணி காத்துவிடும் இந்த ஓமவல்லி செடிகள்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

●

வாசகர் குரல்...

அனைவரும் படிக்க வேண்டிய கதை!

புத்தகத்தை திறந்ததும் அமுத மொழி இதயத்திற்கு இதமான மௌன கீதமாய் இழைகின்றது. "தகுதியைப்பெறு" அற்புதமான வரிகள்.


பகவான் இரமண மகரிஷியின் வாழ்க்கைச்சுருக்கத்தை வரைந்த ஆசிரியருக்கு எமது நன்றிகள்! குருவைத்தேடி ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்த திருமதி. மாதங்கி பாலாஜிக்கு எமது மனமார்ந்த வாத்துக்கள்! சாட்சி பெட்டிச்செய்தி சாட்டையால் அடித்து ஞானத்தோடு வாழச் சொன்னது போலிருந்தது. கொத்தமல்லியின் மருத்துவ வாசம் அற்புதம்.

– திருமதி. இந்துமதி பலராமன், அயனாவரம்.

யோகி ஸ்ரீராம் குருஜிக்கு நமஸ்காரம், தங்களின் இம்மாதப் பெட்டிச்செய்தி

"சாட்சி" மிக, மிக அருமை. இரமண மகரிஷியின் " சாட்சி யாயிரு" புரிந்தாலும் உங்களது எழுத்தில் படிக்கும்போது மிக விளக்கமாக புரிந்தது. மிக்க நன்றி! திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம் அவர்கள் எழுதிய சாயிலீலாவைப் படித்த போது "காரணம் இன்றி காரியம் இல்லை" என்பது புரிந்தது.

– திருமதி. லதா பாஸ்கரன், சென்னை.



சமத்துவ சாகரம் குருநானக் கட்டுரை படித்து வியந்தேன். குருநானக் கபீரின் சீடர் என்பதும், தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்தார் என்பதும் எனக்கு புதிய செய்தி! தட்சிணாமூர்த்தி சுவாமிகள் சீவசமாதி கட்டுரை அற்புதம். நான் அடிக்கடி செல்லும் சீவசமாதி. பெட்டிச்செய்திகள் சிறப்பு.

– திரு. சிவராமன், திருவாரூர்.

சாயி மகராஜ் குருவைத்தேடி

இதழை கையில் எடுத்ததும் கடைசி பக்கம் வரை ஒரே மூச்சில் படித்து விடுகின்றேன். எப்படி என்றே தெரியவில்லை. எனக்கு படிக்கும் ஆர்வமா? அல்லது, தங்களது இதழில் வரும் செய்திகள் என்னை ஒரே மூச்சில் படிக்கவைக்கின்றதா புரியவில்லை. ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்கள்.

– திருமதி.கலாப்பிரியா, சிம்மக்கல். மதுரை.

சாயிலீலாவில் இம்மாத கதாநாயகி பரமேஸ்வரி போன்று இன்னும் பலபேர் கண்மூடித்தனமாக தான் பிடித்ததே மிகச்சரியானது என்று பிடிவாதமாக இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் படிக்கவேண்டிய கதை. திருமதி.ஜெயந்தி ஸ்ரீராம் அவர்களுக்கு மிக்க நன்றி!

– திருமதி. கமலா, தஞ்சை.

சின்ன, சின்ன செய்திகள், பகவான் இரமணரின் கட்டுரை சத்சரிதம் அனைத்தும் அற்புதம். இதழில் தொடர் அதிகம் வருவது போல் உள்ளது. தொடர்களை குறைத்துக்கொண்டு இன்னும் நிறைய கட்டுரைகளையும் குட்டிச்செய்திகளையும் வெளியிடுங்கள். படிப்பதற்கு இன்னும் இனிமையாக இருக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு. மிக நன்றி!

– திரு. பாலகுமாரன். குடந்தை.

ஆசிரியருக்கு வணக்கம். என் பெயர் பவர் சிங். பஞ்சாபி கடந்த 45 வருடங்களாக சென்னையில் வசித்து வருகின்றேன். தமிழ் எழுத படிக்க நன்றாக தெரியும். தங்களது இதழை எதார்த்தமாக படிக்க நேர்ந்தது. அதில் தாங்கள் எழுதியிருந்த சமத்துவ சாகரம் குருநானக் பற்றிய கட்டுரை மிக, மிக அற்புதம். ஆசிரியர் குழுவினர் அனைவருக்கும் பகவான் குருநானக் அவர்களின் ஆசி கிடைக்க பிரார்த்திக்கின்றோம். நன்றி!

– திரு. பவர் சிங், சென்னை.

தங்களது இதழில் வெளிவரும் அட்டைப்பட பாபா மிகவும் அழகாக இருக்கின்றார். பாபாவைப் பார்த்ததுமே புத்தகத்தை படித்துவிடவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகிவிடுகின்றது. மிக்க நன்றி! இம்மாத இதழில் தகுதியைப் பெறு என் மனதை மிகவும் கவர்ந்தது. வாழ்த்துக்கள்.

– திரு. இரமணி, திருவொற்றியூர்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி

இணையத்தில் படிக்க...

www.saidhyanalaya.org

சாய் தியானா

வாட்ஸ் அப் நம்பர்

9941816692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்,அண்ணாநகர் ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

திருமதி.மகாலட்சுமி முருகன், மதுரை, ரூ.2000.

சாய் மகராஜ், சென்னை. ரூ.1000.

திரு. கருணாமூர்த்தி, அயனாவரம். ரூ.1000.

திரு. ஜெயசாந்தி நாகமூர்த்தி,AYK,ரூ.1000.

திருமதி. இராதாகணபதி, வேளச்சேரி. ரூ.1000.

திருமதி. லலிதா, துரைப்பாக்கம்.ரூ.800.

திரு. கேஸ்வர், ஈரோடு, ரூ.700

வாழ்க வளமுடன் சுமதி, கொளத்தூர். ரூ.500.

திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.

திரு.ரத்தினகுமார் குமாரசுவாமி, சென்னை, ரூ.500

திரு.வி.ஆர். ரகோத்தமன்.சென்னை. ரூ.500

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திருமதி. லதா பாபு, வேப்பம்பட்டு. ரூ.500.

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி.ரூ.500

திருமதி.லலிதசுந்தரி, நாவலூர்.ரூ.500.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.400.

திரு.எல்.ஆர். ஆறுமுகம், சென்னை. ரூ.200.

திரு. சந்திரசேகரன், பாண்டிச்சேரி, ரூ.200

திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட்.கொளத்தூர். ரூ.200.

திரு.சூர்யாகுமார். கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.

திரு.பாலசுப்பிரமணியன், சீரடி. ரூ.108.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர். ரூ.101.

திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.100.

திருமதி. பிச்சையம்மாள், பெரம்பூர்.ரூ.100.

திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூ.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* **5 வருச சந்தா – ரூ.1000 (தபால் செலவு உள்பட)**
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர் 99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

- திருமதி. ஜெயசூர்யா, பெங்களூர்.ரூ.1000.
- திருமதி. இந்துமதி பலராமன். அயனாவரம். ரூ.500.
- திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரம்பூர்.ரூ.200.
- திரு.வேணுகோபால், நங்கநல்லூர்.100.
- திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068